விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பதின்னான்கு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | கார்த்திகை 18 | வெள்ளிக்கிழமை | (03.12.2004) | தொலைபேசி - 2223378, 2227644 | ஒலி 350

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## அரசியல் சூனிய நிலை தொடர ஒருபோதும் இடமளிக்க முடியாது

### நோர்வே தூதுவரிடம் தமிழ்ச்செல்வன்



(கிளிநொச்சி)

போருமில்லாத சமாதானமுமில்லாத அரசியல் சூனிய நிலை தொடர ஒருபோதும் இடமளிக்க முடியாதென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நோர்வேத் தூதுவரிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கருடனான சந்திப்பின் போதே அவர் இதனை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்று நோர்வேத் தூதருக்கும் அரசியல்துறை பொறுப்பாளருக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இச் சந்திப்பின்போது மாவீரர் தினத்தன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஆற்றிய உரையின் விளக்கத்தை தமிழ்ச்செல்வன் நோர்வேத் தூதுவருக்கு விளக்கினார். அத்துடன் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் வரைபின் அடிப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# பண்டாரநாயக்க வம்சத்திற்கு எம்.பி. மகேஸ்வரன் சாட்டை!

### இதனால் சபையில் பெரும் சர்ச்சை மகேஸ்வரனை தாக்குவதற்கும் முயற்சி

(நமது நிருபர்)

**பண்டாரநாயக்க வம்சத்தினர் குறித்து ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் சபையில் நேற்று ஆற்றிய உரையினால் அங்கு பெரும் சர்ச்சை கிளம்பியது. பண்டாரநாயக்க வம்சத்திற்கு மகேஸ்வரன் வேண்டும் என்றே அபகீர்த்தி ஏற்படுத்துவதாகக் கூறி ஆளும் தரப்பு எம்.பிக்கள் அவரைத் தாக்க முயன்றனர்.**

வரவு - செலவுத் திட்டத்தில் விமானப் போக்குவரத்து அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலைவாதம் நேற்று நடைபெற்றது. அமைச்சர் மகேஸ்வரன் 12.30 மணிமுதல் சுமார் அரை மணிநேரம் வரை உரையாற்றினார். இதன்போது பண்டாரநாயக்க முதல் சந்திரிகா வரை ஊழல் மோசடிக

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸாரின் இரவுநேர ரோந்தில் எட்டுப் பேர் கத்திகளுடன் சிக்கினர்

(கோண்டாவில்)

கோப்பாய் பொலிஸாரின் இரவு நேர ரோந்து நடவடிக்கையின்போது நேற்று முன்தினம் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து கிறிஸ் கத்திகள் மீட்க்ப்பட்டுள்ளன.

கோப்பாயில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் ஆட்டோ ஒன்றை வழிமறித்து சோதனை நடத்திய பொலிஸார் அதிலிருந்த 6 பேரைக் கைதுசெய்துள்ளனர். அவர்களிடமிருந்து இரண்டு கிறிஸ் கத்திகள் மீட்கப்பட்டன.

இராசமணி சுரேஸ், மகாலிங்கம் தவராசா, பொன்னம்பலம் தங்கராசா, துரைசிங்கம் திலீபன், அல்பிரட் ஜெயதாஸ், பிரான்சிஸ் ஜெனிஸ் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் நேற்று

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சபை அமர்வில் ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுப் பிற்பகல் பாராளுமன்றத்திற்குச் சென்று சபை அமர்வுகளில் கலந்துகொண்டார்.

வரவு - செலவுத் திட்டத்தில் கல்வி உயர்கல்வி அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நடைபெற்றபோதே அதில் ஜனாதிபதி கலந்துகொண்டார்.

பிரதமருக்குரிய ஆசனத்தில் ஜனாதிபதி அமர்ந்திருந்து விவாதத்தை அவதானித்தார். கல்வி அமைச்சு ஜனாதிபதியின் கீழ் இருக்கிறது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்று முதன்முறையாக ஜனாதிபதி பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (த-04)

## கொள்ளை மலிவு விலையில் தொலைபேசிகள் விற்பனை

### விற்ற நபர் பொலிஸாரிடம் மாட்டினார்

(யாழ்ப்பாணம்)

கடை உடைத்துத் திருடிய பெருமளவான கையடக்கத் தொலைபேசிகளை யாழ். நகரில் கொள்ளை மலிவு விலையில் விற்றுக்கொண்டிருந்த நபர் ஒருவர் யாழ். பொலிஸாரிடம் வசமாக மாட்டினார். இவரிடம் இருந்து 12 கையடக்கத் தொலைபேசிகள், 6 சார்ஜர்கள், கையடக்கத் தொலைபேசி பற்றரிகள், மேசைத் தொலைபேசிகள் 6 உட்பட பல பொருட்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, கடந்த 30 ஆம் திகதி இரவு சாவகச்சேரியில் உள்ள மைக்றோ செலூலர் என்ற தொலைபேசி விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு 3 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகம் பெறுமதியுடைய பொருட்கள் திருடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கோரிக்கை பாரதூரமானவையாம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் இலங்கை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக் கோரிக்கை மற்றும் சுயநிர்ணயக் கோரிக்கை என்பன பாரதூரமானவையே.

அதனை தமது அரசாங்கம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளது நிராகரிக்கும் என பாகிஸ்தானிய பிரதி உயர்ஸ்தானிகர் நேற்று தன்னைச் சந்தித்த ஜே.வி.பி. தலைமையிலான மாற்றுத் தமிழ் அரசியல் குழுப்பிரதிநிதிகளிடம் தெரிவித்ததாக தெரியவருகிறது.

விடுதலைப்புலிகளின் நிர்வாக வரைபானது

(14 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரில் அமைதியைபேண இரு தரப்பும் நேற்று இணக்கம்

(திருகோணமலை)

திருகோணமலையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பின்போது இராணுவத்தின் 22 ஆவது படைப்பிரிவின் மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் குலதுங்க மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அக்கியட்சகர் உபாலி கேவகே ஆகியோர் கலந்துகொண்டனர். விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், நகரப் பொறுப்பாளர் சிவகுமார், மாவட்ட உதவி இராணுவத் தளபதி வசந்தன் மற்றும் குணம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜக்சன் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 92 ஈழத் தமிழ் அகதிகள் விமானத்தில் நாடு திரும்பினர்

### யு.என்.எச்.சி.ஆரின் ஏற்பாட்டில்

(கொழும்பு)

இந்திய அகதிமுகாம்களில் தங்கியிருந்த 92 ஈழத் தமிழ் அகதிகள் நேற்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்தியாவிலிருந்து ஈழத் தமிழ் அகதிகளை விமானம் மூலம் அழைத்துவரும் பணியை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் ஆரம்பித்துள்ளது.

விமான நிலையத்தை வந்தடைந்த ஈழத் தமிழ் அகதிகளை குடிபெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிலையத்தின் பிரதிநிதிகள் பொறுப்பேற்றுக் கொண்டனர். பொறுப்பேற்கப்பட்டவர்கள் அவர்களின் சொந்த இடங்களுக்கு உறவினர்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஈழத் தமிழ் அகதிகள் கடல் வழியாக சட்டவிரோதமாக நாடு திரும்புவதையடுத்து

(14 ஆம் பக்கம் பார்க்க)

# தொடரும் சங்கரமட மர்மங்கள்



இந்தியாவின் புகழ்பூத்த முன்னிலை ஆச்சிரமமான காஞ்சி சங்கரமடம் விவகாரம் தொடர்பான விசாரணைகள் பல புதிய திருப்பங்களுடன் நகர்ந்து செல்கின்றது.

சுமார் 2000 ஆண்டு வரலாற்றையுடைய இந்த மடத்திற்கான பக்தர்களாக இந்திய அரசியல் தலைவர்களும், பெரும் வியாபாரப் புள்ளிகளும் விளங்கிவந்ததால் இம் மடத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்ட பல தவறுகள் வெளியே வராமல் இருந்தன. இந் நிலையில் தமிழக அரசு மேற்கொண்ட துணிச்சல் நடவடிக்கையினால் கைதுசெய்யப்பட்ட மடாதிபதி சங்கராச்சாரி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பிணையில் வெளியே வரமுடியாதபடி அவர் மீதான



புகார்கள் நாளாந்தம் கூடிச்செல்கின்றன.

### தமிழகப் பொலிஸின் அதிரடி

மேற்தட்டு பிராமணர்களின் பூர்வீகம் எனக் கருதப்படும் இம்மடத்தின் மீதான தமிழக பொலிஸின் பாய்ச்சல் ஆரம்பத்தில் பிராமணர்கள் மற்றும் இந்துதத்துவவாதிகளின் எதிர்ப்பை ஓளரவு சந்தித்தாலும் அவற்றையெல்லாம் இல்லாது செய்யுமளவிற்கு குற்றப்பட்டியல் தற்போது நீண்டுகொண்டு செல்கிறது.

குறிப்பாக இந்துதத்துவவாதிகள் ஜெயேநதிரரின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்களை ஆரம்பிக்க முயன்றாலும், பின்னர் அவற்றை அவர்கள் இரத்து செய்யுமளவிற்கு குற்றச்சாட்டுக்கள் வலுப்பெற்றனவாக இருந்தன.

சங்கரமட 'சங்கரராமன் கொலை விவகாரம் தொடர்பான கைதுடன் ஆரம்பித்த இவ்விவகாரம் தற்போது கணக்காய்வாளர் ராதாகிருஸ்ணன் கொலை முயற்சி விவகாரம், திருக்கோட்டியூர் மாதவன் மீதான தாக்குதல், சங்கரமடத்தில் பல வருடங்களிற்கு முன்பு இறந்த இரு மாணவர்கள் விவகாரம், பிரபல்ய எழுத்தாளர் அனுராதா ரமணன் மீதான பாலியற் பலாத்கார முயற்சி என குற்றச்சாட்டுக்கள் விரிவடைந்து செல்கின்றன.

### ஜெயேந்திரர் உஷா தொடர்பு

இந்நிலையில் இன்று சங்கராச்சாரியாருக்கு மிகவும் நெருக்கமானவர் எனக் கருதப்படும் உஷா என்ற பெண்ணிடம் பொலிஸார் தீவிரவிசாரணை மேற்கொண்டுள்ளனர். இருவருக்குமிடையிலான தொடர்பு பற்றிய விடயத்தை பொலிஸார் நேற்றுமுன் தினம்நீதிமன்றில் வெளிப்படுத்தியிருந்தனர். இதே போன்று கடந்த யூலை மாதம் சங்கரமடத் தில் இறந்த யுவஸ்ரீ என்ற மாணவியின் மரணத்திலும் சந்தேகமிருப்பதாக அவரது பெற்றோர் காஞ்சிபுரம் பொலிஸில் புகார் செய்துள்ளனர். இந்தச் சிறுமி இரத்த வெள்ளத்தில் இறந்துகிடந்ததாகவும் இதுபற்றி அப்போது பொலிஸில் புகார் செய்ய முடியாதநிலை இருந்ததாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

### ஜெயேந்திரரின் கோரிக்கை

காஞ்சிபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்துஜெயேந்திரரிடம் விசாரணை நடந்தபோது, முதல்வர் ஜெயலலிதாவிடம்பேச தன்னை அனுமதிக்குமாறு அவர் கேட்டிருக்கிறார்




கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்ட நீங்கள் முதல்வர் உள்பட யாருடனும் தொலைபேசியில் பேசுவது சாத்தியம் இல்லை என்று எஸ்.பி. பிரேம்குமாரும், கூடுதல் எஸ்.பி. சக்திவேலும் கூறினர்.

ஆனாலும், சங்கராச்சாரியார் கலங்கிய விழிகளுடன் தொடர்ந்து இதே கோரிக்கையை முன்வைக்க, வீடியோவில் வேண்டுமானால் பேசுங்கள் அந்த கேசட்டை முதல்வருக்கு அனுப்பிவைக்க முயற்சி செய்கிறோம் என்று கூறியுள்ளனர் அதிகாரிகள்.

சங்கராச்சாரியார். பேசுவதை அவருக்குத் தெரியாமல், அந்த அறையில் இருந்த ரகசிய கேமராக்களில் படம்பிடித்து வந்த பொலிஸார், இம்முறை அவருக்கு முன்பாகவே ஒரு கேமராவை ஸ்டாண்ட் போட்டு நிறுத்த, கடகடவென பேச ஆரம்பித்திருக்கிறார் சங்கராச்சாரியார்.

அதில் அழுதபடியே பேசியுள்ள சங்கராச்சாரியார்,

'சங்கரராமனை நான் தான் கொலை செய்யச் சொன்னேன். பத்தே நிமிஷத்துல புத்தி தடுமாறிப்போய்விட்டது. காமாட்சியம்மன் கோவில்ல அம்மனாக இருக்கிறது நீங்கதான், நீங்கள்தான் இப்போது எனக்கு அம்மன், கடவுள் எல்லாம்.

உன்னை வேண்டி கேட்கிறேன்... என்னை மன்னிச்சுரு.. என்னை விட்டுடு.. இந்த உதவியை சாகிறவரைக்கும் மறக்கமாட்டேன் என்று கூறியிருக்கிறார் சங்கராச்சாரியார் என்கிறது காவல்துறை வட்டாரம்.

இதை முதல்வருக்கு அனுப்புவதற்காக எல்லாம் நாங்கள் செய்யவில்லை. அவர் வாயால் மேலும் ஏதாவது உண்மை வரலாம் என்பதால் அவருக்கு அப்படி ஒரு உறுதிமொழி தந்துபேச வைத்தோம் என்கின்றனர அவ்வதிகாரிகள்.

இந்தத் தகவல் பா.ஜ.க. தலைமையையும் எட்டியுள்ளது. டெல்லியில் நிருபர்களிடம் பேசிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் சுஷ்மா சுவராஜ், ஜெயலலிதாவை காமாட்சி அம்மன் என்றெல்லாம் ஜெயேந்திரர் புகழ்ந்ததாகவும், மன்னிப்பு கேட்டதாகவும் செய்திகள் பரப்பப்படுகின்றன.

இந்தச் செய்தி உண்மையா என்று சங்கராச்சாரியாரிடம் நாங்கள் சிறையில் கேட்ட போது அதை முழுக்க முழுக்க மறுத்தார். தவறே செய்யாத நான் ஏன் அப்படியெல்லாம் சொல்லப் போகிறேன் என்று திருப்பிக் கேட்டார் சங்கராச்சாரியார் என்றார் .

### அத்வானிக்கும் தொடர்பு

இதற்கிடையே இன்னொரு பரபரப்பான செய்தியும் காவல்துறை மட்டத்தில் இருநது



கசிகிறது.

இப்போதைய முழு விவகாரத்துக்கும் முக்கியக் காரணமாகப் பேசப்படும் தமிழ்நாடு மருத்துவமனையில் 50 சதவீத பங்குகள் பா.ஜ.க. தலைவர் அத்வானியின் மகளின் பெயரில் இருப்பதாக தகவல்கள் வரு கின்றன.

இதை தன்னிடம் விசாரணை நடத்திய பொலிஸாரிடமே சங்கராச்சாரியார் சொன்னதாக ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சங்கரமடத்தின் சார்பில் வாங்கப்பட்ட இந்த மருத்துவமனைக்கும், அது யாருக்குச் சொந்தம் என்பதில் ஜெயேந்திரருக்கும் மகாசக்தி பெற்றவர்களுக்கும் இடையே நடந்த மோதலால் தான், கொலை விவகாரம் தோண்டப்பட்டதாக தி.மு.க உள்ளிட்ட கட்சிகள் மறைமுகமாக சந்தேகத்தைக் கிளப்பிவரும் நிலையில், இதில் அத்வானியையும் இழுத்துவிட்டு வரும் செய்திகள் பரபரப்பைக் கூட்டியுள்ளன.

இன்னும்பல மர்மமுடிச்சுக்கள் அவிழலாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

நன்றி, இணையத்தளம்

---

# பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து சமூகநல அமைச்சு அதிகாரிகள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

பெண்கள் வலுவூட்டல் சமூகநல அமைச்சின் அதிகாரிகளால் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை விசேட கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது.

பெண்களுக்கு விழிப்புணர்வூட்டும். வகையில் சமூகத்தில் தீர்மானம் எடுக்கப் படவேண்டியவர்களில் பெண்களும் முக்கியமாக உள்ளடக்கப்படல்வேண்டும் என்ற கருத்தை முக்கிய நோக்கமாகக் கொண்டே இக்கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

இக் கருத்தரங்கில் பெண்கள் வலுவூட்டல் சமூகநல அமைச்சில் இருந்து வருகை தந்த சுவர்ணா சுமனசேகரா, பி.பத்ரெனகே ஆகியோரும்சரோஜா சிவச்சந்திரன் மற்றும் அலுவலர் சிலரும் பங்குபற்றியிருந்தனர்.

இக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசுவாமி, யாழ்.மாவட்ட திட்டப்பணிப்பாளர் சுந்தரம் பிள்ளை ,வடக்குகிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி மகாலிங்கம், யாழ்.பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன்,யாழ். போதனா வைத்தியசாலையின் நிர் வாக உத்தியோகத்தர் எம்.பத்மநாதன் ஆகி யோர் உட்படமற்றும் பலஅதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இக் கருத்தரங்கில் பெண்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள், பெண்களுக்கு ஏற்படுகின்ற சட்டரீதியான பிரச்சினைகள், பால் நிலையில் இருக்கின்ற வேறுபாடுகள், அவற்றைப் போக்குவதற்கான நடவடிக்கைகள் மற்றும் பெண்கள் பொருளாதார சமூக அரசியல் அந்தஸ்தை அடைந்து ஆண், பெண் இடையே சமூக உறவை மேம்படுத்துவது ஆகியன உட்பட சர்வதேச மட்டத்தில் பெண்களது நிலைப்பாடு குறித்தும் விரிவாகக் கலந்துரையாடபட்பட்டது.

மேலும் பெண்கள் வலுவூட்டல் சமூக நல அமைச்சினால் வறுமை, பசி, பட்டினி என்பவற்றை தீர்த்தல், எல்லா பிள்ளைகளுக்கும் கட்டாயமாக ஆரம்பக் கல்வி வழங்கல், பால் நிலை சமத்துவத்தையும் வலுவூட்டலையும் ஊக்கப்படுத்தல், பிள்ளைகளின் இறப்பைக் குறைத்தல், பிரசவத் தாய்மார்களுடைய சுகாதாரத் தேவைகளை மேம்படுத்தல், எயிட்ஸ்நோயை தடுத்தல்,சூழல்சம்பந்தமான நிலைப்பாட்டை உறுதி செய்தல் அதாவது சேரிகளில் வாழ்கின்ற 100 மில்லியன் மக்களுக்கு வீடு வழங்கல், வேறு நாடுகளுடன் அபிவிருத்தி நடவடிக்கை குறித்த ஒப்பந்தங்கள் செய்தல் ஆகியன தொடர்பான 8 திட்டங்கள் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர். (ற-19)

---

## வடக்கு – கிழக்கில் உள்ள

# வீதிகளைப் புனரமைப்பதற்கு 300 கோடி ரூபா ஒதுக்கீடு

(மருதங்கேணி)

வடக்கு, கிழக்கு பகுதியில் கார்ப் திட்டத்தின் ஊடான வீதிப் புனரமைப்புக்கு 300 கோடி ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவித்திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாண சபையால் நடைமுறைபடுத்தப் பட்டுவரும் கார்ப்திட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கான புனர்வாழ்வு புனரமைப்பு திட்டத்தின்கீழ் இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியைக்கொண்டு 250 கிலோ மீற்றர் நீளமான வீதிகளும், அவற்றுக்கிடையிலுள்ள பாலங்கள், மதகுகள் என்பனவும் மீள்நிர்மாணம் செய்யப்படும்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்வாகிக்கப்படாத மாகாணசபையின் நிர்வாகத்தால் பராமரிக்கப்படும் வீதிகளே இந்நிதிமூலம் புனரமைப்புச் செய்யப்படும்.

இதில் அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கே அதிக முன்னுரிமை வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-35)

# மனிதஉரிமைக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் அபிவிருத்தி மையப் பணிப்பாளர் பேராசிரியர் எஸ்.வி.பரமேஸ்வரனின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களுக்கான மனிதஉரிமைகள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று இன்று வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற வுள்ளது.


யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறைப் பேராசிரியர் என்.செல்வகுமாரன், சட்டவளாக மூத்தவிரிவுரையாளர் வி.ரி. தமிழ் மாறன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த இந்தக் கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-8)

# கர்மா என்பது உள்ளத்தின் எண்ண வெளிப்பாடே

## வெள்ளிநற்சிந்தனை

ஸத்கர்மா பற்றி கல்கி தர்மம் எளிமையாக விளங்க வைக்கிறது. ஸத்கர்மா இரு



வேறுபட்ட முறையில் செயற்படுகின்றது. அவை,

1. மனோரீதியான ஸத்கர்மா
2. உடல்ரீதியான ஸத்கர்மா

மனோரீதியான 'கர்மா' என்பது நம் எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகளால் ஏற்படுவது. அதாவது நம்மன திலிருந்து உருவாகும் ஒன்று நம் எண்ணங்களுக்கும் நம் வாழ்வில் நடக்கும நிகழ்ச்சிகளுக்கும் உள்ள தொடர்பை இது நிர்ணயிக்கின்றது. பல சமயங்களில் நம் வாழ்வின் வெவ்வேறு பருவங்களில் நெருக்கடியான சூழ்நிலைகள் ஏற்படும்போது நம் மனதில் எனக்கு மட்டும் ஏன் இந்தத் துன்பம்? என்ற கேள்வி முதன்மையாக எழுகின்றது.

குறிப்பாக நாம் விரும்பாத எதிர்மறையான நிகழ்ச்சிகள் நடக்கும் போது மற்றவர்களையோ, அல்லது கடவுளையோ குற்றம்சாட்டுகிறோம். ஆனால், நம் வாழ்வில நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு நாமே காரணமா? அல்லது நம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள காரணமா? இதற்கு அருமையாக ஸ்ரீ கல்கி பகவான விடை கூறுகின்றார்.

நமது வாழ்க்கையை உருவாக்கும் கலைஞர்கள் நாமே தான். ஆகையால் நம்வாழ்க்கையில் நடப்பவைகளுக்கு நாமே தான் முற்றிலும் பொறுப்பு. நம் மனத்தற்கும் வெளி உலகிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. நமது மனம் வெளியுலகில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அது போலவே வெளியுலகம் மனதில் பாதிப்பை உண்டாக்குகின்றது. ஆனால் மனம மிகவும் சக்தி வாய்ந்தது. ஏனெனில் மனதிற்கு சிருஷ்டிககும் திறன் உண்டு. இந்தப் பரந்த உலகத்தினுக்கு சட்டதிட்டங்கள் உண்டு. இதுவே மனிதவாழ்வின் அடிப்படையாகும். வெளியுலகிற்கு விஞ்ஞான ரீதியான விதிமுறைகள் எவ்வாறோ, அவ்வாறே நம் வாழ்க்கைக் கர்மாவின் விதிமுறைகள் கட்டுப்படுத்துகின்றன. கர்மாவின் விதிகளின் கூற்றுப்படி "எண்ணம் எவ்வாறோ அவ்வாறே செயல்களும் நடக்கும்'' இவ்வுலகமும் நம் உள்ளிருக்கும் நிலைமையின் வெளிப்பாடு அந்த அடிப்படையிலேயே தான் நாம் சந்திக்கும் மனிதர்கள். நாம் சந்திக்க நேரிடும் சூழ் நிலைகள். நாம் போராடிக் கொண்டிருக்கும் பிரச்சினைகள், வாழ்க்கை அனுபவங்கள் அனைத்தும் நம்முள் இருப்பதைப் பிரதிபலிக்கின்றன.

எனவே, நம்முடைய வாழ்க்கையின் நிகழ்ச்சிகளையும் சூழ்நிலைகளையும் நாமே உருவாக்குகின்றோம். ஆகவே, வாழ்க்கையை உருவாக்கும கலைஞனும் நாமே தான். இதனால் நாம என்ன நினைக்கிறோமோ நாம் அவைகளாகவே மாறுகிறோம்.

எண்ணம் மிகவும் சக்தி வாய்ந்தது. அதற்கு சிருஷ்டிக்கும் சக்தி உண்டு. இதனால் தான் நல்ல எண்ணங்களும் சரியான உணர்ச்சிகளும் மிகவும் இன்றியமையாதவை ஆகின்றன எண்ணங்களின் கோளத்தினுள் ஒரு அம்பை எய்தாகிவிட்டால் இது அந்த வகையான எண்ணங்களையே ஈர்ககத் தொடங்கிவிடும். நாம் விதைத்ததை நாமே தான் பன்மடங்காக அறுவடை செய்கிறோம்.

ஆகவே, எய்த அம்பு தீங்கு செய்வதாக இருந்தால், அல்லது வெறுப்புடையதாக அமைந்தால் அல்லது பயமாக இருந்தால் அந்த உணர்ச்சியே வெளியுலகிலும் தோன்றும்.

நம் உலகை நாம் தான் உருவாக்குகிறோம். இதற்கு வேறு எவரும் காரணம் இல்லை. நாம் உள்ளே ஒருவாறாக இருந்து கொண்டு வெளியுலகை வேறுவிதமாக அனுபவிக்க இயலாது.

எனவே, நினைப்பது போலவே நடககும் நீங்கள் விரும்பியதையே காண்பீர்கள். அல்லது நீங்கள் வெறுப்பதையே காண்பீர்கள். இதனாலேயே ஸத்கர்மா மனரீதியான தன்மையை பொறுத்தது என கல்கி பகவான் கூறியருளுகின்றார். □

**கல்கி பக்தன்**

# பாராளுமன்றில் மாவீரர் தினம் அனுமதி வழங்கியது யார்?

## ஹெல உறுமய தேரர் கேள்வி

(கொழும்பு)

பாராளுமன்ற வளாகத்திற்குள் விடுதலைப் புலிகளின் மாவீரர் தின நிகழ்வுகள் நடத்துவதற்கு உத்தியோகபூர்வ அனுமதி எதனையும் தான் வழங்கவில்லை என்று சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விசாரணை செய்தபோதே பாராளுமன்ற வளாகத்திற்குள் கற்பூரம் கொளுத்தி, இவ்வாறான நிகழ்வு இடம்பெற்றமை தெரியவந்ததாகவும் அவர் கூறினார்.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

தலதா மாளிகை மற்றும் ஜெயஸ்ரீ மகாபோதி ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தியதோடு பல்வேறு அரசியல் தலைவர்களைக் கொலை செய்த குழுவொன்றின் நினைவு நிகழ்வை பாராளுமன்ற வளாகத்தினுள் நடத்துவதற்கு அனுமதி வழக்கப்பட்டதா? என்று ரத்னதேரர் கேள்வி எழுப்பினார்.

அத்துடன், அரசியல் யாப்பைப் பாதுகாப்பதாக சத்தியப் பிரமாணம் செய்து பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்த உறுப்பினர்கள் யாப்பை மீறும் வகையில் செயற்படமுடியுமா என்றும அவர் வினா எழுப்பினார்.

இந்தவேளையில், கருத்துத் தெரிவித்த சபாநாயகர் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தனின் உரையில் தெரிவிக்கப் பட்ட சில கருத்துக்களை கன்சாட்டில் இருந்து நீக்குமாறு கூறியதாகவும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக தொடர்நதும் கருத்துத் தெரிவிபது மாத்திரம் போதுமானது அல்ல என்று எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இதற்காக நிலையியல் கட்டளை ஒன்று உருவாக்கப்பட்டு இவ்வாறான கருத்துத் தெரிவிப்பதை நிறுத்தும் வகையில் சரத்தொன்றை உருவாக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசியல் யாப்பைப் பாதுகாப்பதற்கு சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடமையிருப்பதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தனின் உரையில் நீக்கப் பட்டவிடயம் குறித்து அறிவதற்கு உரிமையிருப்பதாகவும், சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று தற்போதைக்குக் கொண்டு வரப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார். (9)

# கப்டன் கடல்வேந்தனின் வித்துடல் விதைப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா றம்பைக்குளம் பகுதியில் நிலை கொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது கடந்த 1.08.1997 அன்று மேற்கொண்ட தாக்குதலின்போது விழுபபுண் அடைந்திருந்து கடந்த 28 ஆம் திகதி வீரச்சாவடைந்த கப்டன் கடல்வேந்தனின் வித்துடல் நேற்று முன்தினம் மாலை சாட்டி துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

முன்னதாக ஊர்காவற்றுறைப் பிரதேச சபை திறந்த வெளியரங்கில் நினைவஞ்சலிக் கூட்டம் தீவக தேசிய எழுச்சிப் பேரவை இணைப்பாளர் செல்வம் தலைமையில் இடம் பெற்றது.

சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் பெற்றோர் அஞ்சலி செலுத்தினர். பின்னர் வித்துடல் புனித விதை குழியில் விதைக்கப்பட்டது.

இந நிகழ்வில் பொது மக்கள் பேராளிகள் என பலரும் கலந்து கொண்டனர். (ச)

# கட்டாக் காலிகளின் தொல்லையை கட்டுப்படுத்த முட்கம்பி வேலிகள்

(சாவகச்சேரி)

மறவன்புலோப் பகுதி விவசாய நிலங்களில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மறவன்புலோ விவசாய சம்மேளனத்தின் முயற்சியால் சுமார் ஐந்தரை மைல் தூரத்திற்கு முட்கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது.

4 இலட்சம் ரூபா இதற்காக செலவிடப்பட்டுள்ளது.

தற்போது மாடுகளின் தொல்லை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் இராணுவ முகாமூடாக வரும் மாடுகளைக் கட்டுப்படுத்துமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் இராணுவ அதிகாரிகளைக் கடித மூலம் கேட்டுள்ளார். (க-29)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினால் பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உள்ளூர் விண்ணப்பப் படிவஙகள் யாவும் இம் மாதம் 17 ஆம் திகதிககு முன்னதாகவும் வெளிநாட்டு விண்ணப்பங்கள் யாவும் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாகவும் கிடைக்கக் கூடியவாறு 'கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம், சுதந்திர சதுக்கம், கொழும்பு - 7' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (ற-19)

# பயிற்சிபெற்ற பட்டதாரிகள் ஜனவரி முதல் சேவையில்

(கொழும்பு)

பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி மத்திய மற்றும் மாகாண நிர்வாகத்திற்குட் பட்ட அரச திணைக்களங்களில் சேவைக்கு அமர்த்தப்படுவார்கள் என்று நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை விபரம் அமைச்சுக்களினதும் மாகாண சபைகளினதும் செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மாகாண மற்றும் மத்திய அரசில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பட்டதாரிகளிடமிருந்து உடனடியாக விண்ணப்பங்களைக் கோருமாறு திறைசேரி ஆணையாளர் சகல அமைச்சு மற்றும் மாகாண சபை செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் வேலை வாய்ப்பிற்காக சேர்க்கப்பட்டுப் பயிற்சி பெற்ற பட்டதாரிகள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். (த-9)

## நாவலர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வருடந்தோறும் கார்த்திகை மாத மக நட்சத்திரத் தினத்தன்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை வழிபாட்டை யாழ்ப்பாணம் நாவலர் வீதி நாவலர் கலாசார மண்டபத்தில் நடாத்தி வருகின்றது.

அந்த வகையில், நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மேற்படி மண்டபத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை வழிபாடு இடம்பெறவுள்ளது. (ற)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடாத்தும் ஆன்மீகச் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நாவலர் மணிமண்டபத்தில் வழமை போன்று இடம் பெறும்.

நா.நவராஜ் "நெஞ்சக் கனக் கல்லு நெகிழ்ந்துருக'' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (க)

## புதிய நியமனம்

(புங்குடுதீவு)

தீவக வலய கல்விப்பணிப்பாளராக இருந்து அண்மையில் காலமான பொ.வேணுகோபால் வேணுதாசனுக்குப் பதிலாக திருகோணமலை மாகாண கல்வித் திணைக்களத்தில் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிய வே.மகேந்திரன் தீவக வலயக் கல்விப்பணிப்பாளராக நேற்றுமுதல் நியமிக்கப் பட்டுள்ளார். (க-126)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கைலாசபதியின் நினைவு தினக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபதில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் 'சமகால இலக்கியமும், விடுதலைப் போராட்டமும்' எனும் தலைப்பில் பேராசிரியர் சிவசேகரமும் 'ஈழத்து இலக்கியத்தில் கைலாசபதியின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் கலாநிதி செ.திருநாவுக்கரசும் நினைவுரை நிகழ்த்தவுள்ளனர். (க)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 29



### விருதுகள்

1955-ல் ரிஷிகேசம் போயிருந்தபொழுது சிவானந்தசுவாமிகள் எங்கள் நாற்பது பேருககும் 40 மாலைகள் சூட்டி குதித்துக் கூத்தாடி வரவேற்பு செய்தார்களா. சிவானந்த நகரில் இரண்டு நாள் தங்கியிருநதோம். விரிவுரைகள் புரிந்தேன். அப்பொழுது சுவாமிகள் "திருப்புகழ ஜோதி" என்று பட்டம் வழங்கிய ஆசி கூறினார்.

மதுரை திருஞானசம்பந்தர் மடம் மகாசந்நிதானம் தவத்திரு சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் "அருள் மொழி அரசு" என்று பட்டம் வழங்கினார்கள்.

காமகோடி ஜகத்குரு சந்த்ரசேகர சரஸ்வதி மகாசந்நிதானம் அவர்கள் "சரஸ்வதி கடாக்ஷாம்ருதம்" என்ற விருதை தங்கத்தில் செய்த ஷட்கோண மாலையில் பொறித்து கெளரீசங்கர் உருத்திராட்சத்துடன் அளித்து ஆசி கூறினார்கள்.

அகோபில மடம் ஜீயர் சுவாமிகள திருவல்லிக்கேணிக்கு வந்திருந்த பொழுது என்னை அனபுடன் அழைத்து கண்ணன் தூது விரிவுரை செய்யுமாறு கட்டளையிட்டார். "இருந்து வந்தருள்" என்ற பாடலைப் பாடி ஒருமணி நேரம் விரிவுரை புரிந்தேன். ஜீயா சுவாமிகள் பெரிதும் மகிழ்ந்து தங்கப்பதக்கத்தில் "ஷட்ப தானந்தா" என்று எழுதி பொன்னாடையுடன் கொடுத்து ஆசி கூறினார்.

"வண்டுக்கு ஆறுகால். அதனால் வண்டு ஷட்பதம் என்று பெயர்பெற்றது. அந்த வண்டு ரோஜா மலரிலிருந்தும் தேனை எடுக்கும். களளிப் பூவிலிருந்தும் தேனை எடுக்கும். இப்படி வணடு எல்லா மலர்களிலிருந்தும் தேனை எடுப்பதுபோல் வேதம், ஆகமம், குறான், பைபிள் முதலிய பலப் பல நூல்களிலிருந்து நல்ல கருத்துக்களை எடுத்து அன்பர்களுக்கு விருந்தாகக் கொடுத்து பலகாலும் விரிவுரைத்தொண்டு செய்து வருவதனால் "ஷட்ப தானந்தா" என்ற இந்தப் பட்டம் மிகவும் பொருந்தும்" என்று கூறி அருளினார்.

சென்னை தமிழிசை மன்றத்தின் வெள்ளி விழாவின்போது "இசைப் பேரறிஞர்" என்ற பட்டம் வழங்கினார்கள்.

தமிழிசை நாடக மன்றத்தார்கள் "கலைமாமணி" என்ற விருதை வழங்கினார்கள்.

தருமபுரம ஆதீனம் மகாசந்நிதானம் அவர்கள் "அமுத மொழிக் கொண்டல்" என்ற பட்டத்தை வழங்கிப் பொன்னாடை போர்த்தி, கெளரீசங்கர் உருத்திராட்சமும் வழங்கி ஆசி கூறினார்கள்.

பவானி திருமுறை கழகத்தினர் "திருப்பணிச் சக்கரவர்த்தி" என்றும், திருப்பணிச் சரபம் என்றும் பட்டங்கள் வழங்கினார்கள்.

வேலூர் ஷண்முகனடியார் சங்கத்தார்கள் "சொற்பொழிவ வள்ளல்" என்று பட்டம் வழங்கினார்கள்.

இரண்டாம் முறையாக ரிஷிகேசம் சென்றபொழுது சிவானந்தசுவாமிகள் 'ப்ரவசன ஸாம்ராட்' என்று அன்புடன் பட்டம் சூட்டினார்கள்.

### காசி சுவாமிகள்

மோகனூரில் அருணகிரிநாதர் அறச்சாலையில் முன்புறமுள்ள விசாலமான இடத்தில் அமர்ந்திருந்தேன். அப்பொழுது என்னுடன் காசி சுவாமிகள் என்ற நிஜானந்த பிரம்மேந்திர சரஸ்வதி சுவாமி அளவாளாவி உரையாடிக் கொண்டிருந்தார். அவர் பிறப்பினால் கள்ளர். வடமொழியில் வல்லுநர். உயர்ந்த பண்புளளவர். ஆதலால் அவருடைய தகுதிக்கேற்ப சீரிய கருத்துக்களடங்கிய சொற்களே வெளிப்பட்டன.

சுவாமிகள் வடமொழியிலுள்ள சுலோகத்தைச் சொல்லி, அந்த சுலோகத்தில் பாதியிலேயே சாஸ்திரக் கருத்துக்களனைத்தும் அடங்கியிருக்கின்றன என்று வியந்து கூறினார்.

அப்பொழுது நான் மனத்திற்குள்ளேயே ஒரு நேரிசை வெண்பாவை உண்டாக்கிக் கொண்டேன். "சுவாமி! தமிழலும் இதைப்போன்ற ஒரு அழகிய பாடல் இருக்கின்றது. அப் பாடல் இனிய கனியமுதம் போன்றது. கேளுங்கள்!" என்று அப்புதிய பாடலைப் பழைய பாடல் என்று எண்ணுமாறு கூறினேன்.

அந்தப் பாடல் இது.

நேரிசை வெண்பா

**ஓதிநூல் கோடி உணர்ந்தும் உணரார்கள்**<br>
**பாதிவெண்பாவில் பகரக்கேள்-ஆதி**<br>
**சிவமே பொருள் அதனைச் சேருநெறி அன்பே**<br>
**பவமே பகை அருளால் பார்.**

இதனுடைய கருத்து: சிவம் ஒன்றே ப்ரம்பொருள். அச் சிவத்தை அடைகின்ற வழி அன்பேயாகும். ஆன்மாக்களுக்குப் பகையாக இருப்பது பிறவியேயாகும். அருட் கண்ணாலே பார்த்தால் தான் உண்மைகள் விளங்கும்.

**"அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்**<br>
**இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணதன்**<br>
**இவனிறைவன் என்று எழுதிக் காட்டொணாதே"**

என்பது அப்பர் திருவாக்கு.

**"அருளாலே எவையும் பார் என்றான்-அத்தை**<br>
**அறியாமலே என்றன் அறிவாலே பார்த்தேன்**<br>
**இருளான பொருள் கண்டதல்லால்-கண்ட**<br>
**என்னையும் கண்டிலன் என்னடி தோழி"**

என்பது தாயுமானார் வாக்கு.

இந்த வெண்பாவைக் கேட்டுப் பாடல் மிக அழகாக இருககிறது என்று சுவாமிகள் ரசித்தார்.

### அமர்நாத் யாத்திரை

வடநாட்டு ஸ்தலயாத்திரைகளில் மிகவும் கடினமானது அமர்நாத் யாத்திரையாகும். "அமர்நாத் மரணாத்" என்பது பழமொழி. விவேகானந்த சுவாமிகள் நிவேதிதா தேவியுடன் அமர்நாத் யாத்திரை செய்தாராம். அமரலிங்கத்திற்கு முன்னால் இருந்து அவர் நிஷ்டை புரிந்த பொழுது அவருடைய கண்களில் உதிரம் வழிந்ததாம்.

10-08-1956ல் அமர்நாத் யாத்திரைக்குப் புறப்பட்டேன். என்னுடன் என் தம்பி சச்சிதானந்தன், வி.ஆர்.பீதாம்பரம், பாண்டுரங்கன், ஜெயராமன், பெரம்பூர் திருநாவுக்கரசு முதலியார், துரையூர் மாரிமுத்து முதலியார், திருநெல்வேலி வீ.சங்கரன் பிள்ளை, தில்லையாடி சங்கர்ஜி, ஒரு சமையற்கார ஐயர் ஆகிய நாங்கள் பதினமூன்று பேர் சென்னையைவிட்டுப் புறப்பட்டோம். நானும் திருநாவுக்கரசு முதலியாரும் முதல் வகுப்பிலும் மறறவர்கள் மூன்றாம் வகுப்பிலுமாக நான்குநாள் பிரயாணம் செய்து பதான்கோட்டை அடைந்தோம். முதல் வகுப்பு ஓய்வு அறையில் தங்கினேன். இரவு 10 மணியிருக்கும் விளக்கை எரியவைத்துப் படித்துக்கொண்டிருந்தேன். காஷ்மீருக்குப்போய் திரும்பி வந்து இளம்மனைவியுடன் அங்கு தங்கியிருக்கின்ற ஒருவர், அவருடைய தூக்கத்திற்கு இடையூநாக நான் விளக்கை எரியவிட்டிருப்பதற்காகக் கோபித்து அவருடைய பாஷையில் சத்தம் போட்டு டாட்பூட் என்று கரடிபோல் கர்ஜித்து என்னை வைதான். நான் விளக்கை நிறுத்திவிட்டு படுத்துக்கொண்டேன். காஷ்மீருக்கு அரசாங்க பஸ்மூலம் காலை 6 மணிக்குப் புறப்படவேண்டியிருந்தது. அதனால் நான் அதிகாலை 3 மணிக்கே எழுந்திருந்து குளிர்ந்த நீரில் மூழ்கினேன். விளக்கு எரியவிட்டால் முன் சத்தம் போட்ட கரடி கர்ஜிக்குமே என்று அஞ்சி விளக்கை எரியவிடாமல் பூசைவிளக்கு மட்டும் எரிய வைத்துக்கொண்டு மணியைக்கூட அதிகமாக அடிக்காமல் மெல்ல அடித்துக்கொண்டு பூசை செய்துகொண்டிருந்தேன்.

(தொடரும்)

சட்டவிரோத ஆயுதங்களுக்கு எதிரான

# சர்வதேச மகஜருக்காக கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

சட்டவிரோத ஆயுதங்களுக்கு எதிரான சர்வதேச மகஜா் ஒன்று கொழும்பில் நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தெற்காசியாவின் சிறிய ஆயுதங்களுக்கு எதிரான அமைப்பு மற்றும் பவ்ரல் அமைப்பு என்பனவற்றினால் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக பொது மக்களிடமிருந்தும் இம் மகஜரில் கையெழுத்துக்கள் பெறப்பட்டன. இம் மகஜரில் பெருமளவான மக்கள் கையெழுத்திட்டனர்.

ஒரு மில்லியன் மக்களின் கையெழுத்துக்களைப் பெற்று ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது. பொருததமற்றவர்களின் கைக்கு ஆயுதங்கள் செல்லாமல் தடுப்பதே தீவிரவாதத்திற்கு எதிரான யுதத்தின் அரசியல் நோக்கமாக இருக்கவேண்டுமென பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

(ற-8)

# தொழிற்சங்கங்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்

(கொழும்பு)

அரச நிறுவனங்களின் நிர்வாகத்தில் மாற்றம் மேற்கொள்ளும் போது தொழிற்சங்கங்களின் கருத்துக்களை கேட்டறிவது முக்கியம் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜீர அபயவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சர்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

நவீன உலக்கு ஏற்ற வகையில் அரசதுறை நிறுவனங்களின் நிர்வாகத்தை மறுசீரமைக்க கடந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இவ் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சிறிய நடுத்தர கைத்தொழில் அமைச்சர் கே.டி.லால்காந்த,

பொது நிர்வாக அமைச்சினால 1980ஆம் ஆண்டு யூலை வேலை நிறுத்தம் தொடர்பான பிரசசினைக்கு இதுவரை தீர்வு காணமுடியாமல் உள்ளது.

அரசாங்க ஊழியர்களின் கடமை நேரத்தை 9 மணித்தியாலங்களாக அதிகரிக்காது, 8 மணித்தியாலங்களில் 1 மணித்தியாலத்தையாவது வினைத்திறன மிக்க சேவையாக ஊழியாகளிடமிருந்து பெற்றுக்கொள்வது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

வரவு-செலவுத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள சேவை நேர அதிகரிப்பைச் சட்டமாக்குவது தொடர்பாக எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. அரச சேவையை வினைத்திறன் மிக்கதாக மாற்ற தொழிற்சங்கங்களின் பூரண ஒத்துழைப்பு அவசியம் எனவும் தெரிவித்தார்.

(ற-8)

# வடக்கு-கிழக்கு மாகாண புதிய ஆளுநராக டிரோன்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண புதிய ஆளுநராக டிரோன் பொனாண்டோ இன்னும் சில தினங்களுக்குள் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளார்.

இது தொடர்பாக டிரோன் பொனாண்டோ தெரிவிக்கையில்,

சத்திய பிரமாணம் செய்து கொள்ளவுள்ளேன். ஆனால் அதற்கான திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்றார்.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்தன தனது ஆளுநர் பதவியை இராஜினாமா செய்ததை அடுத்தே பெர்னாண்டோ இப் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார்.

முன்னாள் ஆளுநா அசோக ஜயவாதன பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார்.


டிரோன் பொனாண்டோ வெளிவவகார அமைச்சராக முன்னர் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

(ற)



இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் இன் வெள்ளிவிழா நினைவுக் கேடயத்துக்காக வருடாந்தம் நடாத்தப்பட்டுவரும் கிரிக்கெற் சுற்றுப் போட்டியில் இம்முறை சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட அணிக்கு நிறுவன வாணிவிழாவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் இ.மருதலிங்கம் வெற்றிக் கேடயத்தை வழங்குகின்றார்.

# ஒரு காதலின் கைதி



சிறுகதை

ரசிகலா
வண்ணையூர்

அடர்ந்த கிளைகளோடு கம்பீரமாய் நின்றிருந்த அந்த வேப்பமர நிழலில் சிந்தனையோடு அமர்ந்திருந்தாள் யாழினி. குளுகுளுவென்று வீசிடும் தென்றல் யாழினியை வருடிச்சென்றாலும் அவள்மனதில் ஏற்பட்ட கீறலுக்கு அது மருந்தாக அமையவில்லை. அந்த வேப்பமரத்தின் ஏதோவொரு மூலைக்குள் முடங்கிக்கொண்டு கூவுகின்ற ஒற்றைக் குயிலின் ஓசை அவள் செவிகளைத் தீண்டியது.

'பாவம் இந்தக் குயில். எதற்காகக் கூவுகிறது... இதன் ஓசைகேட்டு அதன் ஜோடிக் குயில் தேடிவந்திடுமா...? அல்லது இந்தக் குயில் படும் வேதனையைத்தான் அது அறிந்திடுமா? இல்லை... என் மனதை தேற்றிடத்தான் இந்தக்குயில் கூவுகிறதா?' எனப் பலவாறு சிந்தித்தாள். யாழினியின் கடந்த கால நினைவுகள் நெருஞ்சி முள்ளாக அவள் நெஞ்சை வருடின.

யாழினி ஏழைக்குடும்பத்தில் பிறந்தவள் என்றாலும் கௌரவமாக வாழ்ந்துகொண்டிருந்தாள். அவள் உயர்தர வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும்போதே எதிர்காலத்தில் நல்ல தொழிலைப் பெற்று குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்ற இலட்சியம் அவள் மனதில் இளையோடிக் கிடந்தது. காதல் வரக்கூடிய பருவம் அவளுக்கு; என்றாலும் காதலையே அடியோடு வெறுத்தாள்.

தனது காதலை வேண்டித் தவம் கிடந்தவர்களையெல்லாம் தட்டிக்கழித்தாள். இருந்தாலும் இரும்பான மனதையும் இளக வைக்கும் காதல் யாழினியையும் விட்டுவைக்கவில்லை. அவள் பாடசாலை செல்லும் பாதையில் தினமும் அவள் விழிகளுக்குள் காதல்விதை தூவி இதயத்தில் இடம்பிடித்தான் சாந்தன். யாழினியும் சாந்தனின் காதலை ஆனந்தமாய் ஏற்றுக்கொண்டாள். தினமும் அவர்கள் காதல் தீபமாய் சுடர்விட்டது.

யாழினி காதல்வலையில் வீழ்ந்தாலும் கல்விக் கடலில் முன்னேறிச்சென்று முத்தெடுத்துக்கொண்டாள். அவள் திறமைக்குத் தகுந்த ஆசிரியத் தொழில் கிடைத்ததினால் அவள் குடும்பத்தை வாட்டிய வறுமை விடைபெறத் தொடங்கியது.

''ஏய் யாழினி, உனக்கென்ன தலைவிதியா; உன்ர அழகுக்கும், திறமைக்கும் கொஞ்சமேனும் பொருத்தமில்லாத சாந்தனைக் காதலிக்கிறியே'' என யாழினியின் நண்பி அடிக்கடி சொல்வாள்.

''ரதி, காதலுக்கு அழகும் படிப்பும் அத்திவாரம் இல்லை. எனக்குச் சாந்தன் என்ன தொழில் செய்தாலும் பரவாயில்லை. அவரது அன்பு மட்டுமே போதும்...'' என்று நண்பியின் பேச்சை தட்டிக் கழிப்பாள்.

ஒருநாள் யாழினி தன் மனதிலுள்ளதை சாந்தனிடம் நேரடியாகவே கேட்டுவிட்டாள்.

''சாந்தன், நம்ம காதலைப் பற்றித் தெரிஞ்சவங்களெல்லாரும் எனக்கும் உங்களுக்கும் பொருத்தமே இல்லையென்று சொல்லுறாங்க. இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீங்க...?''

''யாழினி, நீ ஏன் கவலைப் படுறாய்... வாழப்போறது நாம தானே. எனக்குக் கல்யாணம் என்று ஒன்று நடந்தால் அது உன்னோட தான்... உனக்கு என்மேல நம்பிக்கை இருக்கா...?''

''சாந்தன், எனக்கு எல்லாமே நீங்கள்தான். நம் இருவருக்கிடையேயும் தாழ்வுச்சிக்கல் ஏற்படாம ஒருத்தரையொருத்தர் புரிஞ்சுக்கிட்டு நடந்தால் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது...'' யாழினி சொன்னதைக் கேட்டதும் சாந்தனின் மனம் குழந்தைபோல் குதூகலித்தது.

''யாழினி.. யாழினி.. உன்னைப் போல் நல்ல பெண் எங்கேயுமே இருக்கமாட்டாள். நீ எனக்குக் கிடைத்ததே பெரும் அதிஷ்டம்தான். இன்னும் இரண்டே நாள் பொறுமையா இரு. எங்க வீட்டில நம்ம விடயத்தைச் சொல்லி சம்மதம் வாங்கிவிடுகிறேன்....'' என்று சொல்லிப் புறப்பட்டுப் போனான்.

யாழினிக்கு இரண்டுநாளும் இரண்டு யுகம்போல் கழிந்தது. 'சாந்தனின் பெற்றோர் சீதனம் கேட் பார்களா...? எங்க காதலுக்கு சம்மதிப்பார்களா? கடவுளே நீதான் துணை' என்று கடவுளிடம் பிரார்த்தித்துப் பரிதவித்தாள்.

மறுநாள் நேரத்துடனேயே எழுந்துகொண்ட யாழினி, அவசர அவசரமாகத் தனது காலைக் கடன்களை முடித்துக்கொண்டு பாடசாலை செல்ல ஆயத்தமானாள். என்றும் இல்லாதவாறு அவள் மனம் இன்று இறக்கைகட்டிப் பறந்தது.

'யாழினி, இந்த நீலவண்ணச் சாறியில் நீ தேவதை மாதிரி இருக்கிறாய்' என்றோ ஒருநாள் சாந்தன் சொன்னது அவளுக்கு ஞாபகம்வந்தது. உடனே சாந்தனுக்குப் பிடித்த அந்த நீலநிறச் சாறியை உடுத்துத் தன்னை அலங்கரித்துக்கொண்டவள், பாடசாலை நோக்கி நடக்கலானாள். அவள் விழிகள் சாந்தனையே தேடின.

சாந்தன் வேலைபார்க்கும் கடையை நெருங்க நெருங்க யாழினியின் மனதிற்குள் படபடப்பு அதிகமாகியது. மெதுவாகக் கடைப்பக்கம் திரும்பிப்பார்த்தாள். கடை மூடியிருந்தது. அங்கே சாந்தனைக் காணவில்லை. யாழினிக்கு ஏமாற்றமாய் இருந்தது. மனம் நிறைந்த துயரத்தோடு பாடசாலையை அடைந்தாள்.

'ஏன் சாந்தன் வரவில்லை? என்ன நடந்தது?' என்ற கேள்விகள் அவளைப் பாடாய்ப்படுத்தின. ஒருவாறு பாடசாலை முடிந்து, வீடு வந்தவள், மாலையானதும் சாந்தனை வழமையாகச் சந்திக்கும் இடத்திற்குச் சென்று அவனை எதிர்பார்த்திருந்தாள். சில மணிநேரம் கழிந்ததும் அவள் எதிர்பார்த்ததுபோலவே சாந்தன் வந்துகொண்டிருந்தான். அவனது முகம் சோகத்தின் கோடுகளைச் சுமந்துகொண்டிருந்தது.

''ஹாய் யாழினி!'' வேறெதுவும் பேசாமல் மௌனமானான். யாழினியின் முகத்தைப் பார்த்ததும் சாந்தனுக்குத் தான் சொல்ல வந்ததைச் சொல்வதற்குத் தயக்கமாக இருந்தது.

'யாழினி என்மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள். இவளிடம் போய்... என்னை மறந்திடுன்னு... எப்படிச் சொல்லுறது' என்று சாந்தன் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான்.

''என்ன சாந்தன், எதுவுமே பேசுறீங்க இல்ல... எத்தனை மணி நேரமா உங்களுக்காகக் காத்திருக்கேன் தெரியுமா?'' என்று யாழினி சாந்தனின் மௌனத்தைக் கலைத்தாள்.

''யாழினி, வந்.... வந்து... நம்ம காதலைப் பற்றி வீட்டிலே சொன்னதும் ஒரு பூகம்பமே வெடித்தது. என்னுடைய அப்பாவின்ர நண்பரின் பெண்ணை நான் கட்டிக்கணுமாம். இல்லையெண்டா அவங்க இறந்துடுவாங்களாம். நாளைக்கே பெண்பார்க்கப் போறம். எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை... அதனால...''

''அதனால...ம்...சொல்லுங்க சாந்தன்...''

''அதனால... என்னை மற... மறந்திடு யாழினி'' எனப் பயந்தவாறு மிகவும் மெல்லிய குரலில் கூறினான். அவன் சொன்னதைக் கேட்டதும் யாழினியின் மனது தணலாய்க் கொதித்தது. யாழினி எதுவும் பேசாது வேறுபக்கம் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

''யாழினி... யாழினி... என்னை மன்னிச்சிடு... எங்க குடும்பத்தினர் எல்லாருமே நான் கௌரியைத் தான் திருமணம் முடிக்கணும்னு பிடிவாதமாய் இருக்காங்க. எனக்கு நீயும் வேணும்.. அவங்களும் வேணும்.. நான் என்ன செய்வது'' என்று கேட்கும்போதே,

''போதும் சாந்தன், நீங்க பேசினது போதும்... உங்க அம்மா அப்பாவைக் கேட்டா என்னைக் காதலிச்சீங்க... இத்தனைநாளா நாங்கள் பழகிய நினைவுகளை ஒருநிமிடத்தில் மறந்திடச் சொல்லுறீங்களே... பெண்கள் மனசில அன்பை விதைச்சிட்டா அது விருட்சமாய் வளர்ந்திடும். அந்த விருட்சத்தை வேரோடு அறுத்தெறிய எவராலுமே முடியாது. இதனை முதலில் புரிந்துகொள்ளுங்க'' என்றவள் சாந்தனைத் திரும்பியும் பார்க்காது அவ்விடத்தைவிட்டுச் சென்றுவிட்டாள்.

யாழினிக்கு உலகமே வெறுத்தது அழுதழுது அவள் கண்கள் சோர்ந்துபோயின. ஒரு வாரமாகப் பாடசாலைக்கும் செல்லாது வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடந்தவள் சாந்தனின் நினைவு மனதை உலுப்பியதனால்தான் அவர்கள் தினமும் சந்திக்கின்ற அந்த வேப்பமரத்தின்கீழ் உட்கார்ந்து சிந்தித்தாள். அவள் மனதினை ரணமாக்கிய காதல் நினைவுகள் கண்களைக் குளமாக்கியது.

''யாழினி.... யாழினி...''

யாழினியின் பின்னால் நின்று யாரோ மெதுவாய் அவளை அழைப்பது கேட்கவும் கண்களைத் துடைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்தாள். அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அங்கே சாந்தனை அவள் எதிர்பார்க்கவில்லை.

''யாழினி, எப்படி இருக்கிறீங்க...''

''ஏன் இன்னும் உயிரோட இருக்கிறேனென்று கேட்கவில்லையே அதுபோதும் சாந்தன்''

''யாழினி, ஏன் அப்படியெல்லாம் பேசுறீங்க. நானே மனம் நொந்துபோய் வந்திருக்கிறன். யாழினி, உன்னை நான் கைவிட்ட பாவமோ தெரியேல்ல. அந்தக் கௌரி அவளோட அழகுக்கும், படிப்புக்கும் நான் தகுதியில்லாதவனென்று சொல்லி என்னை வேண்டாம் என்று சொல்லீட்டா. அதனால எங்க அம்மாவும் அப்பாவும் அவங்களோட பிரச்சினைப்பட்டுவிட்டு வந்திட்டாங்க. எனக்கு மிகுந்த அவமானமாய்ப் போச்சு. யாழினி, நீயும் என்னை ஒதுக்கிவிடாதே...'' என்று சாந்தன் கூறியதைக் கேட்டதும் யாழினிக்கு ஆத்திரம் வந்தது.

''சாந்தன், இப்படிப் பேச உங்களுக்கு வெட்கமாய் இல்லையா? அன்றைக்கு எவ்வளவு சுலபமா உங்களுடைய மனதில இருந்து என்னைத் தூக்கியெறிஞ்சிட்டுப் போனீங்க. இண்டைக்கு எவளோ ஒருத்தி உங்களை அவமானப்படுத்தினதால திரும்பவும் என்னிடம் வந்திருக்கிறீங்க. இல்லையெண்டா என்னை நினைத்தே பார்த்திருக்கமாட்டீங்க. அப்படித்தானே!''

''இல்லை யாழினி... என்ரை நிலைமை...''

''வேண்டாம் சாந்தன்.... நீங்கள் எதுவும் பேசவேணாம். காதல் என்பது அழகு, அந்தஸ்துப் பார்த்து வருவதில்லை. அதனால்தான் நீங்கள் எனக்குப் பொருத்தமில்லையென்று தெரிந்தும் நான் உங்களைக் காதலித்தேன். எனது காதல் புனிதமானது. ஆனால் உங்களுடைய காதல் கறைபடிந்துவிட்டது. 'என்னை மறந்திடு' என்று நீங்கள் சொன்னபோது என் மனம் அடைந்த வேதனை உங்களுக்குத் தெரிந்திருக்காது. இனியும் உங்களை ஏற்க நான் தயாராயில்லை. நீங்கள் போகலாம்''

யாழினி சொன்னதையெல்லாம் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த சாந்தன் எதுவும் பேசாது மௌனமாகச் சென்றுவிட்டான். யாழினி சாந்தனையும் அவன் காதலையும் மறக்க நினைத்தாலும் அவள் மனம் காதலின் கைதியாகி இதயச்சிறையில் சிக்கிக்கொண்டது. இதனால் தினமும் அவள் காதல் தண்டையிலிருந்து தப்பிக்கமுடியாது பரிதவித்துக்கொண்டிருக்கிறாள்.

* * *

# உதை பந்தாட்ட இறுதிப் போட்டிகள்

(சுண்டுக்குளி)

அகில இலங்கை உதை பந்தாட்டச் சங்கம், யாழ் மாவட்ட பாடசாலைகள், உதை பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் மாவட்ட மட்டத்தில் 13 வயதிற்குட்பட்டோருக்கான பாடசாலை அணிகளுக்கிடையிலான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30மணி தொடக்கம் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில், இலங்கை உதை பந்தாட்ட சம்மேளனத்தின் இணைப்பாளர் எஸ்.கிளிபேட் அந்தனிப்பிள்ளையின் நெறிப்படுத்தலில் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்றுவதற்காக நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், யாழ்.மத்திய கல்லூரி, இளவாலை சென்கென்றீஸ் கல்லூரி, அருணோதயாக் கல்லூரி, தேவரையாளி மத்திய மகாவித்தியாலயம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், ஊர்காவற்றுறை சென் அந்தனீஸ் கல்லூரி ஆகிய ஏழு பாடசாலைகளின் அணிகள் தகுதிபெற்றுள்ளன.

(ந-110)

# சதுரங்க ராணி வித்தியாராணி கிரேக்கிலிருந்து நாடு திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

கிரேக்க நாட்டில் இடம் பெற்ற



உலக இளைஞர் சதுரங்க சம்பியன்ஷிப் போட்டிகளில் வெற்றிகரமாக பங்குபற்றிய பின் ' சதுரங்க ராணி' வித்தியாராணி ந்ாடு திரும்பியுள்ளார்.

வேம்படி மகளிர் கல்லூரி மாண வியான இவர், 81 நாட்டு வீர, வீராங்கனைகள் பங்கு பற்றிய இப போட்டியில் இலங்கையணி சார்பில் பங்கு பற்றினார்.

இப்போட்டியில் விளையாடியவர்களில் ஆகக் கூடுதலாக 8 புள்ளிகளை 6 பேர் பெற்றனர்.

இலங்கை அணி சார்பில் பங்கு பற்றிய 6 வீரர்கள அதிக பட்சமாக 5 புள்ளிகள் பெற்றுள்ள நிலையில், தமிழ் பெண்ணான வித்தியாராணி 4 புள்ளிகள் பெற்றுள்ளமை சிறப்பம் சமாகும். (து-7)

# கொல்கத்தா கிரிக்கெற் டெஸ்ட் இந்தியாவுக்கு எதிர்பாரா வெற்றி

இந்திய-தென்னாபிரிக்க அணி



களிடையே நேற்று முடிவடைந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்தியா எதிர்பாராத விதமாக 8 விக்கெற்றுக்களால் வெற்றிபெற்றுள்ளது. இவ் வெற்றி மூலம் 1:0என்ற அடிப்படையில் தொடரையும் வென்றுள்ளது.

தென்னாபிரிக்கா முதல் இன்னிங்ஸ்-305. இந்தியா முதல் இன்னிங்ஸ்-411. தென்னாபிரிக்கா தனது இரண்டாவது இன்னிங்ஸில் நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெற்றுக்களை இழந்து 172 ஓட்டங்களை எடுத்தது. ஸ்மித்-71 ஓட்டங்களுடன் ஹர்பஜன் பந்து வீச்சில் லக்ஷ்மனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.



நேற்று இறுதிநாள் ஆட்ம் தொடர்ந்த போது தென்னாபிரிக்க அணி 222 ஓட டங்களுக்கு தனது சகலவிக்கெற்றுக்களையும் இழந்தது. காலிஸ் சிறப்பாக ஆடி 55 ஓட்டங்களைப் பெறறார். புரூன் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ஹர்பஜன் மிகச் சிறப்பாகப் பந்து வீசி 87 ஓட்டங்களை மத்திரம் கொடுத்து



7 விக்கெற்றுக்களை வீழ்த்தினார். அனில் கும்ளே இப் போட் டியில் 3 விக்கெற்றுக்களை வீழ்த்தியதன் மூலம் இந்தியாவில் அதிக விக்கெற்றுக்கள் வீழ்த்தியவர் என்ற கபில்தேவின் சாதனையை 434 விக்கெற்றுக்களை வீழத்தியதன் மூலம் முறியடித்தார். கபில்தேவ் வீழ்த்திய விக்கெற்றுக்களின் எண்ணிக்கை 431.

117 ஓட்டங்கள் என்ற சுலபமான வெற்றி இலக்குடன இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கிய இந்திய அணி 2விக்கெற்றுக்களை இழந்து 120 ஓட்டங்களைப்பெற்று வெற்றி பெற்றது. ஷெவாக்-10, காம்பீர்-26, டிராவிட்-47 சச்சின் -32 ஓட்டங்களைப் பெற்றனர். நிற்றனி, ரூடொல்ப் இருவரும் தலா 1 விக்கெற்றை வீழ்த்தினர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஹர்பஜன்சிங்கும், தொடர் நாயகனாக வீரேந்தர் ஷெவாக்கும் தெரிவு செய்யப் படடனர். இருவருக்கும் 50ஆயிரம் ரூபா பணப்பரிசும் வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டியும் பரிசாக வழங்கப்பட்டன.

இந்தியாவின் சார்பில் அதிக விக்கெற்றுக்களை வீழ்த்திய அனில் கும்ளேக்கும் சிறப்புப் பரிசாக வெற்றிக் கிண்ணம், இந்திய கிரிக்கெற்சபைத் தலைவா ஜெகன் மோகன் டால்மியாவால் வழங்கப்பட்டது. (து-7)

# ஹராரே ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அமோக வெற்றி

நேற்று முன்தினம் இங்கிலாந்து-சிம்பாபவே அணிகளிடையே ஹராரேயில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் இங்கிலாந்து அணி 161 ஓட்டங்களால் அமோக வெற்றி பெற்றிருக்கிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முத




லில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்ப வீரர் பெல் 5 ஓட்டங்களுடனும் அடுத்து வந்த அணித்தலைவர் வோஹன் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். சிம்பாபவே அணிசார்பில் பனயாங்கார மிகச் சிறப்பாக பந்துவீசி 3 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

சோலங்கி-42, ஸ்டிறிஸ்-33, கொலிங்வூட்-7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இந்நிலையில் இங்கிலாநது அணி 35ஓவர்களில் 5 விக்கெற்றுக்களை இழந்து 121 ஓட்டங்களை மாத்திரமே எடுத்திருந்தது. தொடர்ந்து வந்த பீற்றர்சனும் ஜோன் ஸும் இணைந்து ஆறாவது விக்கெற்றுக்காக 80 பந்துகளில் அபாரமாக அடித்தாடி 120 ஓட்டங்களைக் குவித்தனர். ஜோன்ஸ் 2 சிக்ஸர் 6 பவுண்டரி உட்பட, 46 பந்துகளில் 66 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பனியஙகாரவின் பந்து வீச்சில் மஸகட்ஷாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். பீற்றர்சன் ஆட்டமிழக்காது 3 சிக்ஸா 4 பவுண்டரிகள் உட்பட 77 ஓடடங்களை எடுத்தார். உதிரிகளாக 19 ஓட்டங்கள் கிடைத்தன. இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 6 விக்கெற்றுக்களை இழந்து 263 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீசசில் பனியங்கார-3 விக்கெற்றுக்களையும் உற்சயாடி, ஈவிங், மற்சிக்கெனயேரி ஆகியோர் தலா 1 விக்கெற்றையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி, 36 ஓவர்களில் 102 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழநதது.

மற்சிக்கென்யேரியும் ரெயிலரும் சிறப்பாக ஆட்டத்தை ஆரமபித்த போதும் மற்சிக்கென்யேரி 17 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார். தொடர்ந்து ரெயிலரும் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க,



தொடர்ந்து வந்த வீரர்களும் ஓட்டம் பெறாமலும் மிகக் குறைநத ஓட்டங்களுடனும் விக்கெற்றுக்களை இழந்தனர்.

சிம்பாப்வே அணிசார்பில அணித் தலைவர் தைபு ஆகக்கூடுதலாக 32 ஓட்டங்களை எடுத்தார். இப்ராஹிம் 12 ஓட்டங்களுக்கு தனது விக்கெற்றைப் பறிகொடுத்தார். உதிரிகளாக 17 ஓட்டங்கள் கிடைத்தது குறிபபிடத்தக்கதாகும் பந்துவீச்சில் வோவ்-4, கொலிங்வூட் -3, கைல்ஸ்-2, அண்டர்சன் 1, விககெற்றுக்களை வீழ்த்தினா.

இவ் வெற்றிமூலம் இங்கிலாந்து 2:0 என தொடரில் முன்னிலையில் உள்ளது.

இப் போட்டியில் 161 ஓட்டங்



களால் தோல்வியுற்ற சிம்பாப்வேக்கு இது ஒரு நாள் போட்டிகளில் ஏற்பட்ட இரண்டாவது படுதோல்வியாகும். முன்னர் 1995 இல் இலங்கையிடம் 191 ஓட்டங்களால் தோற்றதே அதன் மோசமான படுதோலவியாகும். இத் தொடரின் மூன்றாவது போட்டி நாளை புலாவாயோ நகரில் நடைபெறும். (து-7)

## விளையாட்டு செய்திகள்

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் 'இதய வீணை' நிகழ்ச்சி தொடர்பில் கூட்டமைப்பினர் சபையில் சர்ச்சை

(கொழும்பு)

பணம் தந்தால் விடுதலைப் புலிகளின்,புலிகளின்குரல் வானொலியை இலங்கை முழுவதும ஒலிபரப்புவீர்களா? என சவால் விடுக்கும் வகையில் தமிழ்த் தேசியக கூட்டமைபபின் பாராளுமன்ற உறுபபினர் ம.க.ஈழவேநதன் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கேள்விக்கணை தொடுத்தார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் தமிழ்ச் சேவையில் ஒலிரபரப்புச் செய்யபபடும் 'இதய வீணை' நிகழ்ச்சி தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று முனதினம் பெரும் கூச்சலும் குழப்பமும் எழுப்பப்பட்டது.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் நேற்றுமுன்தினம் தமிழ்த்தேசியக் கூடடமைப்பின் பாராளுமனற உறுப்பினர் பா. அரியநேநதிரன் உரையாற்றுகையில்,

தமிழ் மக்களின் உண்மையான உணர்வுகளினைப் புண்படுத்தும் வகையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஈ.பி.டி.பியினரால் நடாத்தப்படும 'இதய வீணை' நிகழ்ச்சி குறித்து கடும கண்டனத்தைத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய ஊடகத்துறை பிரதி அமைச்சர் சேகு இஸஸதீன், குறிப்பிட்ட நிகழ்ச்சியானது ஈ.பி.டி.பியினரால் பணம் கொடுத்து ஒலபரப்பபபடுவதாகவும், நீங்களும் பணம் செலுத்தினால் ஒலிபரப்புவோம் எனவும் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதனையடுத்து, சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. தமிழ்த் தேசியக் கூடடமைபபின் பாராளுமன்ற உறுப்பினர்கள, இவ்வாறு ஒரு கட்சியின் நிகழ்ச்சிகளை பணம் செலுததியது என்பதற்காக ஒலிபரப்ப முடியாது எனக் கூச்சலிட்டனர்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய ஊடகத்துறை பிரதிய மைச்சர், சேகு இஸ்ஸதீன்,

அரசு தரப்பு ஊடகம் என்பது அனைத்துத் தரப்பினருக்கும் சந்தர்ப்பம் அளிப்பதாக அமைய வேண்டும் .இந்தவகையிலேயே ஈ.பி.டி.பியினருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதனால் உங்களுக்கு என்ன பிரச்சினை இருக்கின்றது. உங்கள் கருத்தைக் கூறுங்கள் நிவர்த்தி செய்யத்தயாராக இருக்கிறோம் எனத்தெரிவித்தார். (ற-4)

# நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம்

## ஜனாதிபதி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஒரு சிலரின் அர்ப்பணிப்புடன் மட்டும் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு விசாகா கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், மக்கள் சமாதானக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்பதற்காக பாரிய பொறுப்பை தோளில் சுமந்தேன். அதனைத் தற்போது நிறைவேற்றி உள்ளேன். நாடு இன, மதங்களால் வேறுபட்டிருக்கும்வரை நாட்டில் சமாதானத்தை உருவாக்க முடியாது.

நாடடில் உள்ள பாடசாலைகளும் இன, மதங்களினால் வேறுபட்டிருக்கின்றன. மக்கள் கேட்கும் சமாதானத்தை அரசாங்கம் என்றவகையில் எங்களால் பெற்றுக்கொடுப்பது கடினம், ஏனெனில் ஒருசிலரே சமாதானத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்கள்.

நாம் சமாதானத்திற்குத் தேவையான அனைதது நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம. எனவே, இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையினை முன்னெடுக்க நாம் எதனையும் செய்யவில்லையென நீங்கள் கூறமுடியாது.

இதேவேளை, நாங்கள் இதில் தோல்வியடைந்ததாகவும் கூற முடியாது. 10வருடங்களுக்கு முன்னர் 23.3சதவீத மக்களே பேச்சுவார்தத மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் எனத் தெரிவித்தனர். 70 சதவதமான மக்கள வடக்கு-கிழக்கு இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்ததை மூலம் தர்வுகாண்பதை விரும்பவில்லை.

ஆனால், 1996ஆம் ஆண்டு நடத்தபபட்ட கணக்கெடுப்பின் படி 67 சதவீத மக்கள் இப பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் எனத் தெரிவித்தனர். இவை அனைத்தும் எமது முயற்சியினாலேயே ஏற்பட்டன எனவும் தெரிவித்தார் (ற-4)

# புதுடில்லியில் அரச எதிர்ப்புப் பேரணி
# குளிர்கால கூட்டத்தொடரில் குழப்பம்


## வாஜ்பாய், அத்வானி உட்பட நூற்றுக்கணக்கானோர் கைதாகி விடுதலை

(புதுடில்லி)

பார்லிமென்டின் குளிர்கால கூட்டத் தொடரின்முதல் நாளான நேற்றுமுன் தினம் விலை உயர்வைக் கண்டித்து பாரதிய ஜனதாக்கட்சி சாபில் டில்லியில் பேரணி நடத்தப்பட்டது. பாராளுமன்றத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்ற முன்னாள் பிரதமர் வாஜ்பாய், கட்சித் தலைவர் அத்வானி உடபட நூற்றுக்கணக்கானோர் கைதுசெயயப் பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

பாராளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. இதன்போது தங்களின் பலத்தைக் காட்ட பா.ஜ. சார்பில் டில்லியில் பிரமாண்ட பேரணி நடத்தப்பட்டது. விலையுயர்வு மற்றும் பல்வேறு பிரச்சினைகளில் மத்திய அரசின போக்கைக் கண்டித்து இந்தப் பேரணி நடந்தது.

டில்லியிலுள்ள ராம்லீலா மைதானத்திலிருந்து பாராளுமன்றத்தை நோக்கிப் பேரணி புறப்பட்டது. வழியில் அம்பேதகார் மைதானம் அருகே வாஜ்பாய், அத்வானி உட்பட பா.ஜ.வினர் நூற்றுக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட அனைவரும் அம்பேத்கார் மைதானத்தில் தங்கவைக்கப்பட்டு பினனர் விடுதலை செய்யபபட்டனர். முன்னதாக ராம்லீலா மைதானத்தில் பேரணி தொடங்கும் முன் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பேசியதாவது,



தற்போதைய மத்திய அரசுக்கு பொருளாதார கொள்கை கிடையாது. எந்த முடிவையும் எடுக்கமுடியாத அரசாக உள்ளது. நாட்டின் எதிர்காலம் எப்படியிருக்க வேண்டும் என்பதைக்கூட இந்த அரசால கணிக்கமுடியவில்லை. பொருட்களின் விலை அடிக்கடி உயர்வதாலும், அரசின் முடிவுகள் அடிக்கடி மாற்றப்படுவதாலும் சாதாரண மனிதனுக்குப் பல துன்பங்கள் ஏற்படுகின்றன. இதைப்பற்றி அரசை நிர்வகிப்பவர்கள் கவலைப்படுவதில்லை. எனது தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, நாட்டின் வளர்ச்சி விகிதம் 8சதவீதமாக இருக்குமென்று கூறிய போது சோனியா உள்ளிட்ட சிலர் அதை 'முங்கேரி லால் கனவு' என்று கிண்ட லாகக் கூறினர்.

ஆனால் இப்போது நடப்பதைப் பார்க்கும்போது அவர்கள்தான் பொய்க் கனவு காணுகின்றனர் என்பது தெளிவாகிவிட்டது. நிச்சயமாக நடக்கும் ஒன்று குறித்தே நாங்கள் கனவு காண்போம். பொருட்களின் விலையுயர்வு குறித்தும், பொருட்களைப் பதுக்குபவர்கள் குறித்தும் மததிய அரசு எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

எங்கள் ஆட்சியின்போது குடிநீர் பற்றாக்குறை ஏற்படவில்லை. இப்போது குடிநீருக்கு பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்றால் எங்கோ தவறு நடந்திருக்கிறது என அர்த்தம். இந்த அரசு பொருட்களின விலையுயர்வைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது. தனது பொறுப்பை மத்திய அரசு உணரவேண்டும். சாதாரண மக்களால் தினமும் பயன்படுத்தப்படும் பொருட்களின விலை உயர்ந்துள்ளதால் அனைவருக்கும் துன்பமே ஏற்பட்டுள்ளது. இந்த விஷயத்தில் எந்தளவுக்கு விழிப்புணர்ச்சி இருக்கவேண்டுமோ அது அரசிடம் இல்லை. இதே நிலை தொடர்ந்தால் அது அரசுக்குத்தான் பாதகமாகப போயமுடியும்.

மத்திய அமைச்சர்களாகவுள்ள லாலு பிரசாத் யாதவும், ராம்விலாஸ் பஸ்வானும் ஒருவர் மீது ஒருவர் புகார் கூறி வருகின்றனர். இந்தப்போக்கை யாரும பாராட்ட மாட்டார்கள். இவ்வாறு வாஜ்பாய் பேசினார். (ப)



பிலிப்பைன்ஸ் நாட்டில் பெய்துவரும் கடும் மழையால் எங்கு பார்த்தாலும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கிறது. வெள்ளத்தில் சிக்கி இதுவரை 380பேர் உயிரிழந்துள்ளனர்.

## தீ வைப்பு

அமெரிக்காவில் சீக்கியர் நடத்தும் எரிவாயு நிரப்புமிடம் இனவெறியர்களால் தீவைத்து எரிக்கப்பட்டது.

இதுபற்றி அமெரிக்காவிலுள்ள சக்கிய அமைப்பின் தலைவர் ராஜ்வந்த் சிங் வெளியிட்ட அறிக்கை,

வர்ஜீனியா அருகே செஸ்டர் பீல்டு என்ற இடத்தில் சரப்ஜித்சிங் என்பவர் எரிவாயு நிரப்பும் மையம் வைத்துள்ளார். இனவெறியர்கள் இந்த மையத்தை தீ வைத்து எரித்தனர்.

இனப்பாகுபாட்டை வெளிப்படுத்தும் வாசகங்களையும் அவர்கள் சுவர்களில பதித்துச் சென்றுள்ளனர். இதற்கு இழப்பீடு கேட்டு அரசை அணுக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சீக்கியர்களின் மத நடவடிக்கை, தொழில் மற்றும் குறிக்கோள் பற்றி, விழிப்புணர்வு பற்றி பிரசாரம் மேற்கொள்ளவும் திட்டமிட்டிருக்கிறோம்.

நியூயோர்க்கில் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட பிறகு இனவெறித் தாக்குதலகள் அமெரிக்காவில் அதிகாித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ப)

WORLD NEWS
உலக தரிசனம்

## விநாயகரை அவமதித்து ரீ.வியில் நிகழ்ச்சி

# மன்னிப்புக் கேட்கவேண்டுமென லண்டன் இந்துக்கள் கோரல்

(லண்டன்)

விநாயகரை அவமதிக்கும் வகையில் தொலைக்காட்சித் தொடரில் காட்சி அமைத்ததாகக் கூறி, அதற்காக ரீ.வி நிறுவனம் மன்னிப்புக் கேட்கவேண்டுமென பிரிட்டனில் உள்ள இந்து அமைப்பு கோரியுள்ளது.

ஐ.ரீ.வி என்ற ரீ.வி நிறுவனம் கடந்த நவம்பர் 24ஆம்திகதி ஒலிபரபபிய தொலைக் காட்சித் தொடரில் இந்த அவமதிப்புக் காட்சி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதில் மாயா என்ற ஒரு பெண் பாத்திரம் வீட்டிலிருக்கும் விநாயகா சிலையைக் கையில் எடுத்துக்கொண்டு, சுனிதா என்ற மற்றொரு பெண்பாத்திரத்தைப் பார்த்து விநாயகர் சிலையாலேயே அடித்துக் கொன்றுவிடுவேன் என்று கூறுவதாகவும் பின்னர் அந்தச் சிலையால் ஓங்கி அடிப்பதாகவும் ஒரு காட்சி அமைக்கப்படடிருந்தது.

அந்தக் காட்சி விநாயகரை அவமதிபபதாகவும், இந்துக்களின் உணர்வுகளைப் புண்படுத்துவதாகவும் இருக்கிறது எனறும் இதற்காக அந்த ரீ.வி நிறுவனம் மன்னிப்புக்கேட்கவேண்டும் என்றும் பிரிட்டன் ஹிந்து போரம் அமைப்பின் தலைவர் ஈஸ் வர் டெய்லர், பொதுச்செயலர் ரமேஷ் கல்லிதாய் ஆகியோர் கோரியுள்ளனர். (ப)

# அமெரிக்காவின் பயங்கரவாத தடுப்பு பிரிவுத் தலைவர் இராஜினாமா

பயங்கரவாதத்திற்குப் பின் அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட தீவிரவாத தடுப்பு சிறப்புப் பிரிவின் தலைவர் டாம் ரிட்ஜ் திடீரென இராஜினாமர் செய்தார்.

அமெரிக்காவில் 2001 செப்ரெம்பர் 11இல் உலக வர்த்தக மையத்தை அல்-கெய்டா தீவிரவாதிகள் விமானங்களை மோதித் தகர்த்தனர். பல்லாயிரம் பேரைக் கொன்றனர். இந்தச் சம்பவத்திற்குப் பின் அமெரிக்காவின் உள்நாட்டுப் பாதுகாப்பில் தனிக்கவனம் செலுத்த தீவிரவாதத் தடுப்புப்பரிவு என்ற சிறப்புப் பிரிவை அமெரிக்க அதிபர் புஷ் உருவாக்கினார். அதன் தலைவராக டாம் ரிட்ஜ் நியமிக்கப்பட்டார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக இப்பதவியைவகித்த ரிட்ஜ் தீவ்ரவாத அமைப்புகளின் தாக்குதலை முறியடிக்கும் நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்டாா.


அதிபர் பஷ்ஷுக்கும் நெருக்கமான இவர் நேற்று முன்தினம் தனது பதவியைத் திடீரென இராஜினாமாச் செய்தார். சொந்தக் காரணங்களுக்காக இராஜினாமாச் செய்வதாக இவர் கூறியுள்ளார். பின்னணியில் வேறு காரணம் இருக்குமென்று சந்தேகிக்கப்படுகின்றது. (ப)



உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு சென்னையில் மெரீனா கடற்கரையில் நேற்று முன்தினம் எயிட்ஸ் விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டது. பல்வேறு பள்ளி, கல்லூரிகளில் இருந்து மாணவ மாணவிகள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

## ஓர் நாடு பிறிதொரு நாடு மீது

# எச்சரிக்கைப் போர் தொடுக்கும்போது ஐ.நா. பாதுகாப்பு குழுவின் அனுமதி வேண்டும்



(நியூயோர்க்)

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அல்லது தடுப்பு நடவடிக்கையாகப் போர்தொடுக்க ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில் அனுமதிவேண்டுமென ஐ.நா.சீரமைப்புக்கான உயர் நிலைக் குழு பரிந்துரை கூறியுள்ளது.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தது சரியா என்பது குறித்து ஐ.நா. உறுப்பு நாடுகளிடையே கடும் கருத்து வேறுபாடுகள் எழுந்த பின்னணியில் அமைக்கப்பட்ட ஐ.நா. மறுசீரமைப்புக் குழு இந்தப் பிரச்சினையையும் மற்றப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் ஐ.நா. பொதுச்செயலர் கோபி அனான் தமது பரிந்துரையை அடுத்த ஆண்டு மார்ச் மாதம் அளிப்பார்.

ஐ.நாவின் அறுபதாம் ஆண்டு விழாவையொட்டி அடுத்த ஆண்டு செப்ரெம்பரில் நடைபெறும் உலகத் தலைவர்களின் உச்சிமாநாட்டில் இதுபற்றி விவாதித்து முடிவெடுப்பதற்கான கருப் பொருளாக இந்த ஆவணம் அமையும். (ப)

# க.பொ.த (சாதாரண தரம்) மாதிரிப் பரீட்சை-2004

## கணிதம்

நேரம்: 1மணி பகுதி I

ஆக்கம் : கு.விக்னேஸ்வரன்
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை

01. $7.9 - 5.98 =$ இன் பெறுமானம் காண்க.

02. 0.05 ஐ சதவீதமாகத் தருக.


03. $n(A) = 5$ ஆயின் தொடை Aயினைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய உப தொடைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

04. $3(x-4) - 2(x-2)$ இனைச் சுருக்குக.

05. 999.499 ஐ கிட்டிய முழு எண்ணில் தருக.

06. $x= \frac{1}{2}$ , $y= -3$ $(2x-y)^2$ இன் பெறுமானத்தினைக் காண்க.

07. உருவில் tஐக் காண்க.





08. $4x^2 -9$ ஐ காரணிப்படுத்துக.

09. சுருக்குக $5\frac{3}{4} - 2\frac{1}{2} =$

10. $\frac{(-12) \times (-15)}{(-3) \times 6}$ இன் பெறுமதியைக் காண்க.

11. கழிக்குக. $1100_{\text{இரண்டு}} - 101_{\text{இரண்டு}}$

12.




Oவிலிருந்து Aயின் திசைகோள் $120^0$. Aயில் இருநது Oவின் திசைகோள் யாது?

13. தீர்க்குக $3x -2 (x-2) = 3x+5$ xஐக் காண்க.

14. $Q = \{x: E\geqslant -2 < x \leqslant 2 \}$ எனின் தொடை 2ஐ மூலகங்களுடன் தருக.

15. (-7) ஆனது $x^2 + 2x - 35 = 0$ இன் ஓர் மூலம் எனக் காட்டுக.

16. (i) $2x+y = 1$ இன் படித்திறன் யாது?

(ii) இக்கோட்டிற்கு செங்குத்தாகவும் (0 , -3) இற்கு ஊடாகவும் செல்லும் கோட்டின் சமன்பாட்டினைத் தருக.

17. சாய்சதுரத்தின் மூலைவிட்டங்களின் இரு இயல்பினை எழுதுக.

18. $y=\frac{r}{1-r}$ எனின் rஐ எழுவாயாகத் தருக.

19.ரூபா 300இற்கு விலை குறிக்கப்பட்ட் பொருள் ரூபா 270இற்கு விற்கப்பட்டது.

(i) கொடுக்கப்பட்ட கழிவு எவ்வளவு?

(ii) கழிவுவீதம் எவ்வளவு?


20.1:50000 என்ற அளவிடையில் உள்ள அளவிடைப் படத்தில் 7Km தூரத்திற்கு வகை குறிக்க அளவிடை நீளம் எவ்வளவாக இருக்கும்.

21.ஒரு வேலையின் $\frac{1}{3}$ பங்கினைச் செய்ய 5மனிதருக்கு 3நாட்கள் எடுத்தன. எஞ்சிய வேலையினை 6 மனிதர்கள் செய்ய எத்தனை நாட்கள் எடுக்கும்?

22.செங்கோண $\triangle$யில் செங்கோணத்தினை ஆக்கும் ஒருபக்க நீளம் 7Cm எனின் அதன் மற்றைய பக்கங்களின் நீளம் யாதாக இருக்கும்.

23.சதுர அடியைக்கொண்ட கூம்பகத்தின் கனவளவு $288cm^3$ உயரம் 8cm எனின் சதுரத்தின் பக்க நீளம் எத்தனை cm?


24.




இயல்பு ஒத்த $\triangle$ கள் PQR, XYZ ஆகியவற்றின் பரப்பளவுகள் $8cm^2$, $32cm^2$ ஆகும்.

PQ= 3cm ஆயின் XZஐக் காண்க. இங்கு $P\hat{Q}R = X\hat{Y}Z$ ஆகும்.


25.





நிழற்படுத்தாத பிரதேசத்தின் சமனிலியைக் காண்க.

26.25,26,33,37,41,46,50,55,65,67,67 இத்தரவுத்தொகுதியின் காலணை இடைவீச்சைக் காண்க.

27. $X+Y = 70$ ஆயின் $B\hat{A}C$ ஐக் காண்க.




28.




வீட்டின் முன்பக்கத் தோற்றத்தினைப் படம் காட்டுகின்றது. தரையில் இருந்து முகட்டின் உயரம் எத்தனை m?

29. AB, CD என்பன ஒன்றுக்கொன்று சமாந்திரமான நேர்கோடுகளாகும். இந்நேர்கோடுகளுக்கு மாறாத்தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கு யாது? வரைந்து காட்டுக.

30. $\frac{m}{n-m} = \frac{8}{3}$ ஆயின் $\frac{m}{n}$ ஐக் காண்க

**க.பொ.த(சா/த) மாணவர்களே!**
**வலம்புரியில் தொடர்ந்து உங்களுக்கான பயிற்சி வினாத்தாள்கள் வெளிவரும்.**
**உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.**

## 'வாகனங்களின் கறுப்புக் கண்ணாடி'

# புதன்கிழமை முதல் பொலிஸார் தீவிர சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

கறுப்புக் கண்ணாடி பொருத்தப்படட வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு எதிராக நேற்றுமுன்தினம் முதல் பொலிஸா சட்ட ரீதியான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதுதொடர்பாக அறிவுறுத்தும் நடவடிக்கைகளும் பரவலாக மேற்கொள்ளப் பட்டுவருவதாக பொலிஸ் வாகனப் போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதிப பொலிஸ்மா அதிபர் காமினி டி சில்வா கூறினார்.

அதேவேளை, மருத்துவ மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக கறுப்புக் கணணாடி பொருத்தப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் காமினி டி சில்வா கூறினார்.

கறுப்புக் கண்ணாடிகளுடன் வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் கண ணாடிகளை மாற்றுவதற்கு 14 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படும். இக்காலப பகுதியில் கண்ணாடிகளை மாற்றம் செயயாத வாகன உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் எனவும் அவர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ற-8)

## மஹோற்சவம்

(பொன்னாலை)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் வைகுண்ட ஏகாதசி மஹோற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்களுக்கு இடம்பெறவுள்ளது.

இம்மஹோற்சவத்தின் சிறப்பம்சமாக எதிர்வரும் 22ஆம் திகதி ரதோற்சவமும் 23ஆம் திகதி தீர்த்தோற்சவம் இடமபெறும். (ப-49)

## விடலை வெளிவந்தது

(கொழும்புத்துறை)

திருமறைக் கலாமன்ற இளைஞர் அவையின் ஏற்பாட்டில் "விடலை" என்ற மாதாந்தப் பத்திரிகை வெளிவந்தது.

கலை, இலக்கியம், சமூகப்பண்பாடு விழுமியங்களைத் தாங்கி வெளிவநதுள்ளது. (ப-51)

## நாவலர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் இந்துமன்றத்தால் நடாத்தப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியில் உளள ஸ்ரீ சோமாஸகந்தர் ஆலயத்தில் நடைபெறும்.

இந்துமன்றத் தலைவர் கு.ஸ்ரீ சங்கர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், தொடக்கவுரையை மன்றப் பொறுப்பாசிரியர் ச.லலீசனும், வாழ்த்துரையை கல்லூரி அதிபர் வ.ஆறுமுகமும் நிகழ்த்தவுள்ளனர்.

அத்துடன் 'நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல்...' என்ற தலைப்பில் சைவப் புலவா நித்திய தசிதரனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது (ற)

## அறிமுக கருத்தரங்கு

வடமாகாணத்தில் உள்ள அரச திணைககளங்களில கடமையாற்றும கணக்காளர்களிற்கான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 8ஆம் திகதி யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

திறைசேரிப் பணிப்பாளர் பி.எம்.பியஸ பெர்னாண்டோ, உதவிப்பணிப்பாளர் கே.அல்பில் ஆகியோர் கலந்துகொண்டு இக்கருத்தரங்கை நடாத்தவுள்ளனர்.

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்கில் உள்ள திணைக்களங்களல் கடமையாற்றும் கணக்காளர் பெயர் விபரங்களை உடனடியாக செயலகத்தற்கு அனுப்பிவைக்குமாறு யாழ்.அரச அதிபா கடிதமூலம் கோரியுள்ளார். (ப-47)

## சேதம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இலந்தைக் குளம் வீதியில் உள்ள மதகு ஒன்று இடிந்த நிலையில் காணப்படுகின்றது.

இதன் காரணமாக மேற்படி பாதையால் பயணிப்போர் விபத்துகளுக்குள்ளாகும் நிலை காணப்படுகிறது. (ப-51)

## இன்று ஒரு தகவல்

# தலைவலி

வணக்கம் சார்! மறுபடியும் ஆரம்பம்! என்ன தலைவலியா? என்று கேட்டுவிடாதீர்கள். தகவல் ஆரம்பம் என்று சொல்ல வந்தேன். தகவல் என்றால் என்ன? தலைவலி என்றால் என்ன இரண்டும் ஒன்றுதானே என்று சிலர் நினைப்பது எனக்குப் புரிகிறது. இரண்டும் ஒன்றோ, இல்லையோ இரண்டுக்கும் சம்பந்தம் உண்டு. தகவலைக் கேட்டுக்கேட்டு உங்களுக்குத் தலைவலி வரவேண்டும். இல்லாவிட்டால் அதைச் சொல்லிச் சொல்லி எனக்குத் தலைவலி வரவேண்டும்.எப்படி இருப்பினும் சரி... அது இருகட்டும். இன்று தலைவலியையே ஒரு தகவலாக ஆக்கி விட்டால் என்ன? அதுவும் சரிதான்.

இந்தத் தலைவலி இருக்கிறதே அது ஒன்றா, இரண்டா எத்தனையோ ரகம்! இருக்கின்ற தலை ஒன்று அதில் ஒற்றைத்தலைவலி, இரட்டைத் தலைவலி, பித்தத் தலைவலி, பசித்தலைவலி என்று நிறைய! குடும்பத் தலைவலியை சொல்லாமல் விட்டீர்களே என்று நினைப்பது விளங்குகிறது.

தலைவலிகளுக்கே தலைவர் என்று சொல்லக் கூடியவளவுக்கு ஒரு தலைவலி உண்டு. அது தான் மைக்ரேன் தலைவலி இது வந்துவிட்டால் அவவளவு தான் தாங்க முடியாது. சுவீடனில் ஒரு டாக்டர் இருநதார். அவரது ஆராய்ச்சி முழுவதும் தலைவலி பற்றியது தான். அவர் என்ன சொல்லிறார் என்று தெரிந்து கொண்டால் நமக்கு உதவியாக இருக்கும்.

பொதுவாக பலவகையான தலைவலிகள் வருவதற்கு என்ன காரணம் என்று அவர் கூறியுள்ளார். பொதுவாக நாம் செய்யும் வேலையின் தன்மை, வேலை செய்யும் இடத்தின் சூழ்நிலை பொதுவாக நம்மைச்சுற்றியுள்ள சூழ்நிலை, இவற்றால் ஏற்படும் பரபரபபு , பதற்றம், ஆயாசம் இவைதான் காரணமாம். இதில் ஒரு வேடிக்கை என்ன தெரியுமா? பதற்ற நிலையில் நாம் ஆழ்ந்து சிக்கியிருக்கும் போது தலைவலி வருவதில்லையாம்.பதற்றம் தணிந்த பின்புதான் தலைவலி மெதுவாகத் தலைநீட்டுமாம்.

ஒருவர் கடுமையாக வேலை செய்து கொண்டிருக்கிறார். இல்லாவிட்டால் ஒரு வாகனத்தை வேகமாக செலுத்திக்கொண்டிருக்கிறார். அப்போது தலைவலி வருவதில்லை. வேலை செய்வதை நிறுத்தியவுடன் தலைவலி வந்து சேரும் .அப்பாடா... வேலை முடிநதது என்று நினைப்போம். “அவசரப்படாதீர்கள் இதோ நான் இருக்கிறேன்'' என்று கூறிவிட்டு அது வந்து விடும்.

சுறுசுறுப்பாக வேலை செய்துவிட்டு ஓய்வெடுக்கும வேளையில், தலைவலி வர என்ன காரணம்? இரத்த ஓட்டத்தில் ஏற்படும் மாறுதல்கள் தான் இதற்குக் காரணம் என்கிறார் அந்த டாக்டர். வலியை உணர்ததும் நரம்புகள் மூளையில் போய் முடிகின்றன. வேலை முடிந்ததும் ரத்த ஓட்டமும் மெதுவாகி விடும். அதனால் மூளைக்குப் போகும் ரத்த அளவு குறையும் உடலில் திசுக்களுக்குத் தேவைப்படும் பிராணவாயுவை எடுத்துக்கொண்டுபோவது ரத்தம் தானே. இது குறையும் போது மூளையில் உள்ள திசுக்களுக்குக்கிடைக்கும் பிராணவாயுவின் அளவும் குறையும் அதனால் தலைவலி வருகிறது என்பது அவரது அபிப்பிராயம்.

மைக்ரேன் தலைவலிக்கு என்ன காரணம்? இது வரைகளும் அதற்குத்திட்டவட்டமான காரணம் எதையும் கூறமுடியவில்லை. உலகில் கிட்டத்தட்ட கால் வாசிப் பேருக்கு இதுவருகிறதாம்.

சாதாரணமாக வம்ச பரம்பரையாக இது வருகிறதாம். 5 பேருக்கு மைக்ரேன் தலைவலி இருந்தால் அதில் 4 பேருக்கு இதுதான் காரணமாம்.இது வந்து விட்டால் வெளிச்சத்தையோ, சத்தத்தையோ கூட சகிக்க முடியாது. எங்காவது ஒரு அறைக்குள்ளே ஓடிப்போய் கதவைச் சாத்திக்கொண்டு முடங்கி விடடால் போதும் என்றிருக்கும். சாதாரணமாக இது சில மணி நேரங்கள் நீடிக்கும். சிலருக்கு இரண்டு மூன்று தினங்கள் வரை நீடிக்கும்.

ஓமோன்கள் சுரப்பதில் ஏற்படும் மாற்றங்களும் மைக்ரேன் தலைவலிக்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று நினைக்கின்றனர். உண்ணும் உணவைப பொறுத்தும் நமக்குத் தலைவலி வருவது உண்டு. அதனால் ஒத்துவராத உணவுகளை நிறுத்திவிடுங்கள்.

இதில் ஆறுதலான ஒரு விடயம் என்ன தெரியுமா? 50 வயதைத்தாண்டிவிட்டால் தலைவலியின் கடுமை குறைந்துவிடும். சாதாரணமாக 60 வயது வரைக்கும் தான் தலைவலியின் அவதியெல்லாம். அதன் பிறகு அது வந்தால் உடம்புக்கோளாறினால் தான். அதனால் 60 ஆம் கல்யாணம் செய்தவர்கள் தலைவலியை நினைத்துப் பயப்படவேண்டாம். அறுபதிற்கு மேல் நமக்குத் தலைவலிவராது. நாம் தான் மற்றவர்களுக்குத் தலைவலியாக இருப்போம்.


**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு இடைக்கால நிர்வாகக் கோரிக்கையே தடைக்கல்

## விமல் வீரவன்ச

(கொழும்பு)

தேக்க நிலையிலுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான அனைத்து யோசனைகளையும் ஒன்றிணைத்து இறுதித் தீர்விற்கான தகுதியான அடிப்படையை அரசு தயாரிக்க வேண்டுமென மக்கள் விடுதலை முனனணியின் பிரசாரச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச கூறியுள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்துவோம் என அழைப்பு விடுத்தபடி அவர்கள் நிபந்தனைகளை முன் வைக்கின்றனர்.

ஆனால் நாம் மிகவும் தெளிவான முறையில் கூறியுள்ளோம், இறுதித் தீர்வுவொன்றிற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு எமது கைப்பையினுள் உள்ளவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று நாம் யாரையும் வற்புறுத்தவில்லை.

அதேபோல் விடுதலைப்புலிகளும் அவர்களின் கைப்பையினுள் உள்ள விடயங்களை ஏற்றுக்கொள்ளுமாறும வற்புறுத்தக்கூடாது. அதாவது ஒவ்வொருவரும் தத்தமது தீர்வுகளுக்கான யோசனைகளை முன் வைத்து பேச்சுவார்த்தைகளை நடாத்தி, சிறந்த பொருத்தமான யோசனைகள் எவையென இனங்கண்டு அவற்றை ஒன்றிணைத்து எல்லோரும் ஏற்றுக் கொளளக் கூடிய இறுதித் தீர்வொன்றைத் தயாரிக்க வேண்டும்.

ஆனால் சில விடயங்களை முன்வைத்து இதன் அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தையை நடத்த வாருங்கள் என்பதல்ல இதற்குப் பொருள். இருப்பினும் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு வருமாறு அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்கின்றார். அவவாறு கூறிக்கொண்டு அவர் நிபந்தனைகளை விதிக்கின்றார்.

இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் படவேண்டுமென்று அவர் கூறினார். இந்த நிபந்தனையே இன்று பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான முக்கிய தடைக்கல்லாக அமைந்துள்ளது என்றும் குறிப்பிட்டார். (ற-8)

## இராசி பலன்

**03.12.2004**
**கார்த்திகை 18, வெள்ளிக்கிழமை**
**சஷ்டி பிற்பகல் 12.56 மணிவரை**
**ஆயிலியம் பிற்பகல் 2.12 மணிவரை**
**இராகுகாலம் 10.45 -12.15 மணிவரை**
**சுபநேரம் 6.15 - 7.45 மணிவரை**
**விநாயகர் விரதம் 7 ஆம் நாள்**

| | |
|---|---|
| மேடம் | வியாபார நன்மை, கௌரவக் குறைவு, காரிய இடையூறு, மனக்கவலை. |
| இடபம் | கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், அற்பர் உறவு, முயற்சி தாமதம். |
| மிதுனம் | இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, வாக்குமேன்மை, தனவருவாய். |
| கடகம் | மதிப்புக்குறைவு, பொருள் விரயம், காரிய தாமதம், பணவிரயம். |
| சிங்கம் | தெய்வ தரிசனம், நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை. |
| கன்னி | பிதாசிந்தை, கோபப்படுதல், கடுமையான முயற்சி, பணவிரயம். |
| துலாம் | தெய்வ தரிசனம், தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, பொருள் சேர்க்கை. |
| விருச்சிகம் | அதிகாரம், சுபநிகழ்ச்சி, உற்சாகம், நல்ல செய்தி, |
| தனுசு | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, புதிய திட்டமிடல், அச்சமான நிலை. |
| மகரம் | எதிர்பாராத அச்சம், உடல் நலக் குறைவு, காரிய தாமதம், பணவிரயம். |
| கும்பம் | திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, பண வருவாய், தெய்வ சிந்தை. |
| மீனம் | சுகவாழ்வு, தெய்வதரிசனம், தொழில் விருத்தி, நண்பர்கள் சந்திப்பு. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்**

## வெளிநாடு செல்லும் வைத்தியர்களின் பிணை வைப்புத் தொகையை அதிகரிப்பது குறித்த தீர்மானம் மீளாய்வு செய்யப்படும்

(கொழும்பு)

நிபுணத்துவ வைத்தியப் பயிற்சிகளுக்காக வெளி நாடுகளிற்கு செல்லும் வைத்தியர்கள் செலுத்த வேண்டிய பிணை வைப்புத் தொகையை 5 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பதென்ற தீர்மானத்தை மீளாய்வு செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான மாற்று வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும அமைச்சு தெரிவித்துள்ளது.

நிபுணத்துவ பயிற்சிகளுக்காக வெளிநாடுகளிற்கு செல்லும் வைத்தியர்களின் பிணை வைப்புத் தொகையை 5 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பதற்கு வைத்தியர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்கள்.

இதனையடுத்தே, அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வைத்தியர்களின் இடமாற்றம் தொடாபான பட்டியல் யோசனையை மறுபரிசலனை செய்யவும் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

நிபுணத்துவ வைத்தியர்கள் சிலரின் வேண்டுகோளின அடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (க-9)

## தப்பியோடிய கைதி கைது செய்யப்பட்டார்!

(துன்னாலை)

பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் சென்ற போது தப்பியோடிய கைதிகளில் மற்றைய நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த யோகராசா யோகேஸ்வரன் என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இவர் தப்பியோடியிருந்த போதும் பல்வேறு திருடடுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். கரவெட்டிகிழக்கு செட்டியார் தெருவிலுள்ள ஓய்வு பெற்ற அதிபர் ஒருவரின் வீட்டில் 27 பவுண் தங்க நகைகளும், ஒரு தொகைப் பணமும் திருடியுள்ளார். அதோபோன்று வேறும் பல இடங்களில இத்தகைய திருட்டுச் சம்பவங்களில் அவர் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எ.தர்மதாஸா, பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் செனரத்,பெருங குற்றப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஜெயசிங்க ஆகியோர் தலைமையில் சென்ற பொலிஸ் குழு, துன்னாலை தெற்கு ஆட்டுப்பட்டிக் கிராமத்தில் வைத்து இவரைக் கைதுசெய்துள்ளது

இவரைக் கைதுசெய்த போது ஒரு தொகைப் பணம் மற்றும் நகைகள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.இவருடன் தப்பியோடிய மற்றைய கைதி கடநத மாதம் 19ஆம் திகதி சிறைக் காவலரிடம் சரணடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-101)

## கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் செந்தமிழ் சிந்தாமணி புலவர் சிரோன்மணி குமாரசுவாமிப் புலவரது 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழ் பயிலும் மாணவர்களிடையேயும் நல்லாசிரியர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றுமஆய்வாளர்களிடையேயும் கட்டுரைப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இலங்கையில் உள்ள பாடசாலைகளில் தமிழ் மொழியில் க.பொ.த. உயர்தரம் படிக்கும் மாணவர்கள் குமாரசுவாமிப் புலவர் பற்றி 2000 சொற்களுக்கு மேற்படாமல் கட்டுரை எழுதவேண்டும்.

அதேபோல் தமிழ் அறிஞர்,விற்பன்னர், ஆய்வாளர்,பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகியோர் புலவர் பற்றி 5000 சொற்களுக்கு மேற்படாமல் கட்டுரைகளை எழுதவேண்டும். அவ்வாறு எழுதபபட்ட கட்டுரைகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் இராமசாமி சிறிஸ்கந்தராசா , y : 93 >g P l h r d N y d > E15 பீட்டர்சன் தொடர்மாடி வெள்ளவத்தை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-9)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும்

## விஞ்ஞானத் துளிகள்

**யாழ்.மாவட்டத்தில் கோவாப் பயிர்ச்செய்கையில் அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் பீடை - Diamond mark அந்துப்பூச்சியும் (Diamond back moth - plutella xylostella) அதன் குடம்பி நிலை ஒட்டுண்ணி Cotesia plutella வும்**

செல்வி ஜமுனா சண்முகசுந்தரம்,
செய்முறை காட்டுனர்,
விலங்கியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(தொடர்ச்சி...)

குடம்பிநிலைகள் (Larval stages) நான்கு பருவங்களைக் கொண்டவை.

ஒவ்வொரு குடம்பியினதும் விருத்திக்கான காலம் சராசரி வெப்பநிலை 29.5 ±0.4°C இலும் சராசரி சாரீரப்பதன் 76.37 ±6.3% இலும் பின்வருமாறு.

1ம் நிலைக்குடம்பி (1st larval instar) - 1.8 நாட்கள்
2ம் நிலைக்குடம்பி (2nd larval instar) - 2.2 நாட்கள்
3ம் நிலைக்குடம்பி (3rd larval instar) - 1.95 நாட்கள்
4ம் நிலைக்குடம்பி (4th larval instar) - 2.25 நாட்கள்

1ம் நிலைக்குடம்பி இளம்பச்சை நிறமானது. ஏனைய பச்சை நிறமானவை. இவற்றின் உடலில் சிறு கறுப்புநிறமான சிலிர்முட்கள் (Setae) காணப்படும். இவை நுண்ணியவை. நுணுக்குக்காட்டியினூடாகவே பார்க்கக்கூடியவை.

1ம் நிலைக்குடம்பி முட்டையிலிருந்து வெளியேறியவுடன் இலையின் மேற்பரப்பைத் துளைத்து உட்செல்லும். இவை இலையின் மேற்பரப்பில் மிக நுண்ணிய துவாரங்களை உருவாக்கும். இக்குடம்பிநிலையை இலையின் வெளிப்புறத்தில் அவதானிப்பது மிக அரிது. இதன் சராசரி நீளம் 1.44 ±0.33mm

2ம், 3ம் நிலைக்குடம்பிகள் மிகவும் சுறுசுறுப்பானவை. இவை பொதுவாக இலைகளின் கீழ் மேல்புற மேற்பரப்பில் காணப்படும். இலையில் மிகக்கூடியளவு சேதத்தை உருவாக்குவது இவையாகும். தமது வெட்டியுண்ணும் வாயுறுப்பினால் (cutting mouthparts) இலையை அரித்து உட்கொள்வதனால் ஈற்றில் இலையின் நரம்பு மட்டும் எஞ்சிக் காணப்படும். இத்தோற்றப்பாடு Skeletonization எனப்படும். 2ம், 3ம் நிலைக்குடம்பிகளின் உடலின் சராசரி நீளங்கள் முறையே 2.65 ± 0.59mm, 4.83 ± 0.99mm ஆகும்.

4ம் நிலைக்குடம்பி 2ம் 3ம்நிலைக்குடம்பிகளுடன் ஒப்பிடும்போது சற்று மந்தமானது. இதன் உடலின் சராசரி நீளம் 8.69 ±0.52mm. இவை இவற்றின் குடம்பிப் பருவ முடிவில் கூட்டுப் புழுவாக மாற்றமடையும்.


ஆண், பெண் குடம்பிநிலைகளை அதன் 3ம் நிலைக்குடம்பிப் பருவத்திலிருந்தே இலகுவாக வேறுபடுத்தக் கூடியதாக இருக்கின்றது. 3ம் 4 குடம்பி நிலைகளில் ஆண் குடம்பியின் உடலின் 8வது துண்டத்தின் முதுகுப்புறப் பகுதியில் மஞ்சள் நிறமான புள்ளி காணப்படும். இப்புள்ளியை பெண் குடம்பிகளில் அவதானிக்கமுடியாது.

கூட்டுப்புழு உருவாக்கத்தின்போது 4ம் நிலைக்குடம்பிகள் தம்மைச் சூழ உமிழ்நீர்ச் சுரப்பியினால் சுரக்கப்படும். மெல்லிய பட்டுநூலினாலான வலையமைப்பைத் தோற்றுவிக்கும். இதனைக் கூட்டுப்புழுவின் கூடு (pupal case) என்பர். இவ்வலையமைப்பானது, பழுப்பு சேர்ந்த வெண்ணிறமானது. இவை ஐதாக பின்னப்பட்டவை. கூட்டுப்புழு அதன் ஆரம்பநிலைகளில் இளம் பச்சை நிறமாகக் காணப்பட்டு இறுதியில் கபில நிறமாக மாற்றமடையும். இதன் இறுதி நிலைகளில் ஒரு சோடி கட் புள்ளிகளை (eye spots) அவதானிக்கலாம்.

சராசரி வெப்பநிலை 29.5 ± 0.4°C இலும் சராசரி சாரீரப்பதன் 76.37 ± 6.3% இலும் சராசரி கூட்டுப்புழு பருவகாலமும் (Mean pupal period) சராசரிநீளமும் (mean length) முறையே 4 தொடக்கம் 5 நாட்களும் 6.2 ± 0.32mm உம் ஆகும்.

இவ்வந்துப்பூச்சியானது தனது வாழ்க்கை வட்டத்தை (life cycle) மேற்குறிப்பிட்ட அதே வெப்பநிலையிலும் அதே சாரீரப்பதனிலும் 29 தொடக்கம் 30 நாட்களில் பூர்த்தியாக்கும். இதன் மூலம் இப்பீடையானது ஒரு வருடத்தில் 12 தொடக்கம் 13 வரையிலான சந்ததியை உருவாக்கும். இந்த சந்ததியின் எண்ணிக்கையானது (Number of generation) சூழல் வெப்பநிலையில் தங்கியுள்ளது.

சூழலின் வெப்பநிலையானது அதிகரிக்கும்போது இவற்றின் வாழ்க்கை வட்டமானது குறுகிய காலத்தில் பூர்த்தியாக்கப்படுவதனால் ஒரு வருடத்திற்கான இவற்றின் சந்ததியின் எண்ணிக்கை கூட்டப்படுகின்றது. இதன் காரணமாக பயிர்ச்செய்கையில் இவற்றின் தாக்கம் அதிகரிக்கப்படுகின்றது.




அந்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டம்.



குடம்பி நிலைகளால் சேதமாக்கப்படும் இலை

சேதத்தின் இறுதி நிலை (வன்கூடாக்கப்பட்ட இலை)

இப்பீடையினால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் முதலில் நாம் இப்பீடையின் குடித்தொகை (pest population) அளவை பாதிக்கும் காரணிகளைப் பற்றி முழுமையாக அறிந்திருத்தல் அவசியமானதாகும். எனவே அடுத்து நாம் இப்பீடையின் குடித்தொகையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றி ஆராய்வோம்.

(தொடரும்)

# எணிகளால்

## உடல் எண் 5 உயிர் எண் 5

5,14,23 போன்ற திகதிகளில் பிறந்து திகதி, மாதம், வருடம் இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் 5 வருமேயானால் இவர் பூரண புதன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப்பதற்கு நடுத்தர உயரமானவர்களாகவும், கவர்ச்சியான தோற்றமுடையவர்களாகவும் காட்சியளிப்பர். பேரறிவும், பெரும் செல்வமும் கொண்ட மனிதர்களாக வாழும் பாக்கியமுடையவர்கள். எக்காரியத்தில் ஈடுபட்டாலும் சீக்கிரமாக முடிக்கவேண்டுமென்று துரிதமாகச் செயல்படுவர். இவர்களுடன் இருப்பவர்கள் சிறிது கவனக்குறைவுடன் இருந்தாலும் கடுமையாகக் கண்டிப்பர்.

எப்போதும் பிறருக்கு உதவ முன்வருவதால் பலருடைய ஆதரவு இவர்களுக்குக் கிடைக்கும். பலருக்கு அறிவுரை கூறும் திறமை படைத்தவராக விளங்குவதால் இவர்களை எல்லோரும் மதிப்பர். கலை நுணுக்கத்திறன் கொண்ட இவர்களுக்கு எங்கு சென்றாலும் வரவேற்பு இருக்கும். இவர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்துவிட்டால் நாட்டின் மிக முக்கியமான மனிதர்களாக விளங்கும் வாய்ப்பு வந்துவிடும். ஆனால் மோசமான பலன்கொடுக்கும் எண்களில் பெயர் அமையுமேயானால் நேருக்குமாறான பலனை அடைந்து திறமையிருந்தும் வாழ்க்கை சோதனை நிறைந்ததாகி விடும்.

இவர்கள் சிந்தனை மின்னல் வேகத்தில் செல்லக்கூடியது. எதையும் விரைவாகச் செய்து முடிக்கவேண்டுமென எண்ணுவர். மற்றவர்கள் தாமதமாகக் காரியங்கள் செய்தால் உடனே இவர்களுக்குக் கோபம் வந்துவிடும். யார் எதைச் சொன்னாலும் உடனே கிரகித்துக்கொள்ளும் தனித்தன்மை படைத்தவர்கள். இவர்கள் சொல்லுகின்ற காரியத்தை மற்றவர்கள் செய்யவில்லையென்றால் கடுமையாக நடந்துகொள்வர். இவர்களைப் போன்று இவர்களைச் சார்ந்திருப்பவர்களும் சுறுசுறுப்புடன் இருக்கவேண்டுமென நினைப்பர். பிறருக்கு பலநாள் சிந்தித்துப் புரியாத ஒரு காரியத்தை உடனே சிந்தித்து கண்டுபிடிக்கும் ஆற்றல் படைத்தவர்களாக இருப்பதால் எங்கு சென்றாலும் பிறர் மதிக்கும் மனிதனாக வாழ்வர். முன்கோபம் வராதபடி பழகிக்கொள்வது சிறப்பாகும்.

சிலநேரங்களில் குழந்தை போன்று பழகும் இவர்கள் தன் மனதில் உள்ளதை மறைககாமல் வெளியிடுவர். இவர்கள் காதல் விவகாரங்களைக் கூட சுற்றியுள்ளவர்கள் அறிந்திருப்பர். ஆனால் அதைப்பற்றிக் கவலைப்படாது நடந்துகொள்வர். இப்படிப்பட்ட இவர்கள் தனக்குப் பிடிக்காதவர்களைக் கவிழ்க்கத் திட்டம்போட்டால் கையில் ஆயுதம் எடுக்காது தீர்த்துக் கட்டிவிடுவர். தான் போடும் திட்டங்களில் எவ்வழியிலாவது வெற்றி பெறவேண்டும் என ஓடோடி உழைப்பர். தன்னால் முடியாதது எதுவுமில்லை. முயன்றால் முடியும் என்ற கொள்கையுடையவர். எல்லோராலும் முடியாது எனக் கைவிடப்பட்ட காரியங்களைத்தான், தான் சாதிக்க வேண்டுமென்று அக்காரியத்தில் இறங்கி செயல்பட்டு வெற்றியடைவர். புதிய புதிய கருத்துக்களையும் பொருள்களையும் விரும்பும் இவர்கள் தானும் புதுமையாக எதையாவது செய்யவேண்டுமென்று எண்ணுவர்.

இந்த ஆதிக்கத்தில் பிறந்த சிலர் தன்னுடைய அறிவாற்றலால் உண்டாகும் கருத்துக்களை மக்களின் நலனுக்காகப் பரப்புவர். இன்னும் சிலர் புதுப்புது ஆடம்பரப்பொருட்களை அல்லது மருந்துகளை அறிமுகப்படுத்துவர். இவ்வாதிக்கத்தில் பிறந்தவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் பிறரை வஞ்சித்தும், ஏமாற்றியும் பிழைக்க வழிதேடுவர். எந்தப் பொருளையும் விரும்பி வாங்கி, விரைவில் அதை வெறுத்துவிடுவர்.

இவர்கள் வாழ்க்கையில் எவ்வளவு துன்பம் வந்தாலும், இன்பம் வந்தாலும் அதைக் கற்பனை செய்துகொண்டு வாழமாட்டார். சிறிதுநேரம் நினைத்து பின் அந்தப் பிரச்சினையைத் தூக்கி எறிந்துவிட்டு மீண்டும் என்ன நடக்கவேண்டும் என்ற புதிய திட்டத்தைத் தீட்டிக்கொண்டு இருப்பர். இவர்களுக்குப் பொருத்தமான பெயர் அமைந்துவிட்டால் என்றும் ஜோகமுடையவர்களாக வாழ்வர். அத்துடன் ஆண்டவனின் அருள் நிறைந்தவர்களாக விளங்குவர்.

நுண்ணறிவு படைத்த இவர்கள் எதையும் எளிதில் புரிந்துகொண்டு அதை உடனே செய்யமுற்படுவர். பல இடங்களைச் சுற்றிப்பார்ப்பதிலும் ஒவ்வோர் இடங்களிலும் என்ன பொருள் விளைகிறது. கிடைகிகறது என்ற ஆராய்ச்சியிலும் ஈடுபடுவர். வெளிநாட்டு மக்கள் எவ்வாறு வாழ்கின்றனர் என்பதை அறியவும் ஆசைப்படுவர். விஞ்ஞானம், கணிதம், மருத்துவம் போன்ற துறைகளில் அதிக நாட்டம் உடையவர்களாக இருப்பர். இவர்களுக்கு எப்பொழுதும் வருவாய் வந்துகொண்டே இருக்கவேண்டும் என்ற எண்ணம் அதிகம் இருப்பதால் பல்வேறு வழிகளில் சென்று பொருளீட்டுவர்.

## ஏற்றமிகு வாழ்வு

Dr.ஆர்.ஐ.துரைமுருகர்

**தொழில்:** கமிஷன், கான்ராக்ட், ஏஜென்ஸீஸ், வாகனம், மருத்துவம், எழுத்து சம்பந்தமான தொழில் போன்றவற்றால் பொருளீட்டுவர்.

**நோய்:** இவர்களுக்கு இரத்த அழுத்தம், மூட்டுவலி, முதுகுவலி, பல்வலி போன்றவைகள் வந்துநீங்கும்

**பெயர் அமைக்கும் முறை:**

புதனின் பூரண பலன் கொண்ட இவர்கள் புதன் ஆதிக்கமான 14,23,32,41,50,59,77, செவ்வாய் ஆதிக்கமான 27,36,45 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக்கொண்டு சிறப்பாக வாழலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

| | |
|---|---|
| யோகமான எண் | -5,9 |
| யோகமான திகதிகள் | -5,14,23,9,18,27,3,12,21,30 |
| யோகமான மோதிரக்கல் | -வைரம், ஜிர்கான் |
| யோகமான நிறம் | -சாம்பல் நிறம் (எல்லா நிறமும் உகந்தவை) |
| ஆகாத நிறம் | -இல்லை |
| ஆகாத திகதிகள் | -இல்லை |

(தொடரும்)

# அதிகாரிகள் உத்தரவாதம் தந்தால் மட்டும் மேற்கு வீதியூடான சேவை மீள ஆரம்பிக்கும்

## காரைநகர் பேருந்துச் சாலை முகாமையாளர் "வலம்புரிக்கு" தகவல்

(காரைநகர்)

காரைநகர் உதவி அரச அதிபரோ அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபையோ காரைநகர் மேற்கு வீதி திருத்தப்படும் என உறுதிமொழி வழங்கினால் மட்டுமே காரைநகர் மேற்கு வீதியூடான பேருந்துப போக்குவரத்துச் சேவையை நடாத்த முடியும் என வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை முகாமையாளர் த. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் மேற்கு வீதியூடான பேருந்துச் சேவையினை காரைநகர் சாலையினர் கடந்த ஒருவாரமாக இடைநிறுத்தியுள்ளனர். இச் சேவையை மீளவும் எப்போது ஆரம்பிக்கவுள்ளீர்கள் என வலம்புரி செய்தியாளர் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சாலை முகாமையாளர் மேலும தெரிவிக்கையில், காரைநகர் மேற்கு வீதிக்கான சேவையை நிறுத்தியுள்ளமை எமக்கும் வேதனையளிக்கின்றது.

ஆனாலும் அவ்வீதி படுமோசமாக சேதமடைந்துள்ளது. இதனால பஸ்களின் பாகங்கள் பழுதடைந்து விடுகின்றன. இவ்வாறு ஏற்படுகின்ற சேதங்களின் செலவுகளை பஸ் சாரதிகளிடமே அறவிடுகின்றோம்.

இதனால் ஒரு சாரதியிடம் இருந்து பல ஆயிரம் ரூபாவை அறவிடவும் நேரிடுகிறது. இதனால் சாரதிகளும் பாதிக்கப்படுகின்றனர்.

இதனால் மேற்கு வீதியூடான சேவையை இடைநிறுத்த எமது தலைமையகமும் அனுமதியளித்துள்ளது.

ஆனாலும்,காரைநகர் பொது மக்களின் நலன்கருதி இவ் வீதியின் புனரமைப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுககுமாறு காரைநகர் உதவி அரச அதிபருக்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் கடந்த வாரம கடிதம் அனுப்பியுள்ளேன். அவர்கள் இன்னமும் பதில் தரவில்லை.

விரைவில் இவ் வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்கள் உறுதிமொழி தந்தால் நாம் மேற்கு வீதிக்கான சேவையை மீண்டும் ஆரம்பிக்கமுடியும்.

எனினும் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகும் ஈழத்துச் சிதம்பர ஆலய திருவாதிரை உற்சவத்திற்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் அவர்களின் நலன் கருதி சிறப்புச் சேவை ஒன்றை நடத்த எண்ணியுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-246)


## சிறு விளம்பரம்

இளம் படைப்பாளிகளிற்கான திறன் வெளிக்கொணர் போட்டிகள்

யாருக்கு? எங்கே?? எப்போது???

(விபரங்கள் நாளைய பத்திரிகையின் இப்பகுதியில் இடம்பெறும்)

(C/813)


## சாவ. தும்புத்தொழிற்சாலை இன்று மீளத்திறந்து வைப்பு

(சாவகச்சேரி)

கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக இயங்காமல் இருந்த சாவகச்சேரி தும்புத் தொழிற்சாலை தற்போது சமூக செயற்பாட்டு மையத்தினால் மீளப் புனரமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புனரமைக்கப்பட்ட இத்தொழிற்சாலை இன்று காலை 10மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசனினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தின் அனுசரணையுடன் இது மீளப்புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ப-47)

## 'தரை ஓடு பதித்தல்' குறித்த பயிற்சி நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கட்டடத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் லங்கா டைலஸ் லிமிடெட் எனும் தரை ஓடு நிறுவனத்தினால் தரை ஓடுகள் பதிப்பது தொடர்பான இருநாள் பயிற்சிக் கருத்தரங்கு நேற்று யாழ். செயலகத்தில் ஆரம்பமானது.

இப்பயிற்சிக் கருத்தரங்கை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசுவாமி ஆரம்பித்து வைத்தார். இப் பயற்சி நெறியில் யாழ். மாவட்டத்தல் இருந்து சுமார் 100 கட்டடத் தொழிலாளர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

நில ஓடுகள் பதிப்பது தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கென கொழும்பில் இருந்து இத் நிறுவனத்தின் சந்தைப்படுத்தும் முகாமையாளர் சேலி மகேந்திரா, பொறியியலாளர் சாந்தி எதிர்சிங்க, உறபத்தி முகாமையாளர் அசோக சுபசிங்க, சஞ்சீவ தர்மசேன ஆகியோர் இங்கு வருகை தந்துள்ளனர்.

இப் பயிற்நி நெறியானது தேறறுக் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை நடைபெற்றது.

இரண்டாம் நாள பயிற்சிநெறி இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி பி.ப: 1.00 மணிவரை நடைபெறவுள்ளது. இவ் இரண்டு நாள் பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களுக்கு இன்று மாலை சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. (ர-19)

## சட்டவிரோத சாராய விற்பனை; ஐவருக்கு 25 000 ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக அரசாங்க முத்திரை இடப்பட்ட சாராயத்தை விற்பனை செய்த ஐவருக்கு யாழ். மாவட்ட நீதிமன்றம் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

மேறபடி குற்றச்சாட்டின் பேரில் கல்வியங்காட்டைச் சேர்ந்த இருவரும் திருநகர், ஆனைக்கோட்டை, அரியாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த மூவரும் யாழ். மதுவரித் திணைக்கள உததியோகத்தர்களால் யாழ். சிறு குற்றத்தடுப்புப் பொலிஸாரின் உதவியுடன் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டு யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இதனை விசாரித்த நீதிபதி இ.த.விக்னராஜா மேற்படி ஐவரையும் தலா 3 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாகவும் தலா 2 ஆயிரம் ரூபாவை தர்மப் பணமாகவும் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

அத்துடன், தர்மப்பணத்தினை கோண்டாவிலில் அமைந்துள்ள கானான் சிறுவர் பாதுகாப்பு இல்லத்திற்கு வழங்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

(ற-5)

## சான்றிதழ் வழங்கல்

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற சமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 10ஆம திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மணடபத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.(ப-79)

## எரிக் சொல்ஹெய்ம் 6 இல் இலங்கை வருகை

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் பாரிய சிக்கலில் மாட்டியிருப்பதாக கண்காணிப்புக் குழுத்தலைவர் அலாரமடித்து அபாய அறிவிப்பு வடுத்தள்ளதை அடுத்து நிலைமையைச் சீராக்குவதற்கு நோர்வே அவசர அவசரமாகத் தனது பணிகளை முன்னெடுத்துள்ளது.

இந்த மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு புலிகளின தலைவா பிரபாகரனின் மாவீரா தின உரை தொடர்பான அரசின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதென்று முன்னர் திட்டமிட்டிருந்த நோாவேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், எதிாவரும் 6 ஆம் திகதியே இலங்கை வரவுள்ளார்.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகா அன்ரன் பாலசிங்கத்தை நேற்று முன்தினம் இலணடனில் சந்தித்துப் பேசிய எரிகசொல்ஹெய்ம், எதிர்வரும் 6 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளாா.

புாிந்துணாவு ஒப்பந்தத்தின் ஆபததான நிலை குறித்தும் பேச்சுக்களை அவசரமாக மீள ஆரமபிக்கவேண்டிய தேவை குறித்தும் புலிகளாலும் கண்காணிப்புக் குழுவாலும் வலியுறுத்தப்பட்டுள்ள நிலையில் ஜே.வி.பி.புலிகளின் யோசனைக்கு எதிராக தமது கடுமையான நிலைப்பாட்டை தெரிவித்து தமது கோரிக்கை நிராகரிககப்பட்டால் தெற்கில் ஆயுதக் கிளர்ச்சி வெடிக்கும என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில் இம் முறை இவரது இலங்கை விஜயம் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்நதாகக் கருதப்படுகிறது. (ற)

## அரச திணைக்களங்களில் பணியாற்ற பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோருமாறு திறைசேரி ஆலோசனை

(கொழும்பு)

மத்திய அரசாங்க மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்ளூராட்சி திணைக்களங்களில் நிலவும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பம் கோருமாறு திறைசேரி ஆலோசனை வழங்கியுள்ளது.

அரச திணைக்களங்களுக்கு இது தொடர்பான சுற்றறிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில், திறைசேரி செயலாளராகக் கடமையாறறிய கரித்த ரத்வத்தை அரச சேவைக்காக ஆட்சேர்ப்புச் செய்வதை நிறுத்தும் சுற்றறிக்கையை விடுத்திருந்தார்.

இதன் காரணமாக ஓய்வு பெற்றுச் செல்லும் ஊழியர்களின் பதவி வெற்றிடங்களை நிரப்பமுடியாமல் போனதாக குறை கூறப்படுகின்றது. ஆயினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் புதிய கொள்கைகளுக்கு அமைய சேவைகளை செயல்திறன் வாய்ந்ததாக மாற்றி பலப்படுத்தும் நோக்கில் மேற்படி சுற்றறிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக திறைசோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-9)

## பிந்துனுவெவ படுகொலை வழக்கு

## மரண தண்டனை தீர்ப்பை மேல் நீதிமன்றம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

பிந்துனுவெவ தடுப்பு முகாமில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் மரண தண்டனை தீாப்பு வழங்கப்பட்ட நால்வானதும் மேன்முறையீட்டு மனுவை விசாரிதத மேல் நீதிமன்றம் தனது தீர்ப்பை ஒத்திவைத்துள்ளது.

பிந்துனுவெவ முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாாி உட்பட நால்வருக்கு எதிராகத்தாக்கல் செய்யப்பட்ட 83 குற்றச்சாட்டுகளின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்ற ட்ரயல் அட்பார் நீதிபதிகளான சரத் அம்பேபிட்டிய, எரிக் பஸ்நாயக்க, உபாலி அபயரட்ண ஆகியோா இவாகளுக்கு மரணதண்டனை தீாப்பளித்தனர்.

இவ்வாறு தீர்ப்பு அளிக்கப்பட்டவர்களில் மூவர் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவில், தமக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிருபிப்பதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை. தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எதிராக தாம் தாக்கல் செய்த ஆதார ஆவணங்கள் தொடர்பாக மேல நதிமன்றம் கூடிய காிசனை செலுத்தவில்லை. அகவே மேல் நீதிமன்றம் தமக்கு எதிராகச் சுமத்திய குற்றச்சாட்டுக்களையும் வழங்கிய தாப்பையும் நீக்கி தம்மை விடுதலை செய்ய வேண்டும் எனக கோரப்பட்டிருந்தது.

இவர்களது மனுவைப் பரிசீலனை செய்த உயாநீதிமன்ற நீதிவான்களான ரி.பி.வீர சூரிய, நிகால் ஜெயசிங்க, என். கே.உடலகம, என்.ஈ.திஸநாயக்க, ராஜா பெர்னான்டோ ஆகியோர் எதிரிகளுக்கு எதிரான மேல் நீதிமன்றின் தீாப்பு தொடாபான தமது முடிவை ஒத்திவைத் துள்ளனர்.

எதிாிகளான சேனக ஜயம்பதி கருணாசேன, டி.பி.சேப் பாலதிஸநாயக்க, எம்.ஏ. சாமி, ஆா. எம்.பிரேமானந்த ஆகியோரே மேல்நீதிமன்றால் மரண தண்டனை தீாப்பு அளிக்கப்பட்டவர்கள் ஆவர்.

இவர்களில் டி. பி.சேப்பாலதிஸநாயக்க, எம். ஏ.சாமி, ஆர். எம்.பிரேமானந்த ஆகியோர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான ரங்சித் பெர்னாண்டோ, டி.எஸ்.விஜயசிங்க மற்றும் ரின்ஸி அரசகுலரட்ண ஆகியோா ஆஜராகினா. சட்டமா அதிபர் சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் ஸி.ஆர்.டி.சில்வா ஆஜராகியிருந்தமை குறிப் பிடத்தக்கது. (ற-4)

## நாவலர் குருபூசை

(நல்லூர்)

ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலரின் குருபூசை தினவிழா நாளை சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பண்டிதை சிவத்திமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் தேவாரம், பண்ணிசையைத் தொடர்ந்து கலாநிதி மனோன்மணி சண்முகதாஸின் விஷேட சொற்பொழிவும், செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (ற-7)


## விவாத அரங்கு - 7

விடயம்

தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் கல்வியை சீரபடுத்துகின்றனவா? சீரழிக்கின்றனவா?

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி

விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சார்ந்தது

## ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

**நாடு பிளவுபடாத வகையில் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு மூலமாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதே ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாடாகும். இதனைத்தான் ஒஸ்லோப் பிரகடனத்திலும் குறிப்பிட்டுள்ளோம் என அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீ.எல்.ப்ரிஸ் தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் தின உரையில், ''அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழர் தாயகம் தொடர்பான தமது நிலைப்பாட்டினைத் தெரிவிக்க வேண்டும்'' எனக் கோரியிருந்தார்.

இது குறித்து எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் அண்மையில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்திய ஜீ.எல்.பீரிஸிடம் கருத்துக் கேட்ட போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இது பற்றித் தெரிவிக்கையில்,

### எமது நிலைப்பாடு

அதிகாரப் பகிர்வு மூலம் சமஷ்டி அடிப்படையில் சகல மக்களும் ஏற்கும் தீர்வு ஏற்பட வேணடும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

எனவே, இலங்கைக்கான சமஷ்டி முறை குறித்து ஆராயப் பேச்சுவார்த்தையை அரசு மீள ஆரம்பிக்கவேண்டும்.

பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்கும் முழுப் பொறுப்பும அரசாங்கத்திடமே இருக்கிறது.

### ஜனாதிபதியின் நழுவல்

ஆனால், ஜனாதிபதியோ எதுவும் புரியாதவர் போல ''புலிகள் பேச்சுக்கு வருகிறார்கள் இல்லை அப்படி வந்தாலும் இடைக்கால நிர்வாகம் தருமாறு கோருகிறார்கள்'' என குற்றஞ்சாட்டிவிட்டு அந்தப் பொறுப்பில் இருந்து நழுவப் பார்க்கின்றார்.

அத்துடன், ஜனாதிபதி பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்கத் தயங்குவதற்கு ஜே.வி.பி.யின் மிரட்டலும் ஒரு காரணமாக இருக்கிறது.

இதனால் சமாதானப்பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பில் ஜனாதிபதியின் வழியில் செல்வதா? அல்லது ஜே.வி.பியின் நிலையில் செல்வதா என்பது குறித்து அரசாங்கமே தீர்மானிக்கவேண்டும்.

விடுதலைப்புலிகள் கடந்த வருடம் அக்டோபர் மாதம் 31 ஆம் திகதி சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக சபைத் திட்டத்தின் அடிப்படையில் பேசத் தயார் என நாம் கடந்தவருடம் நவமபர் மாதம் முதலாம் திகதி அறிவித்திருந்தோம். அதே நிலைப்பாட்டிலேயே தான் நாம் இன்றும் உள்ளோம்.

### புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஆபத்து

20 வருடங்களாக நிலவிவந்த கொடூர யுத்தத்தைத் தணிக்க எமது (ஐக்கிய தேசிய முன்னணி) அரசு பெரும் முயற்சி எடுத்தது. அதன் பயனாக யுத்தத்தை நிறுத்தி அரசு விடுதலைப்புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் செய்துகொண்டது.

ஆனால், இன்று அவ்வாறு பெரும் கஷ்டப்பட்டு உருவாக்கிய அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஜே.வி.பி.போன்ற இனவாதிகளால் ஆபத்து ஏற்படும் நிலை உருவாகிவிட்டது.

### வன்முறைகள் தொடர்கின்றன

நாட்டில் தொடர்ந்தும் பரவலாக வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. குறிப்பாகத் திருகோணமலையில் நிலைமை மோசமடைந்துள்ளது.

அரசாங்கத்திடம் ஒருமித்த நிலைப்பாடு இன்மையே இத்தகைய நிலைமை ஏற்படக்காரணம்.

எமது ஆட்சிக் காலத்திலும் இராணுவத்தினருக்கும் - புலிகளுக்கும் இடையில் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. அந்தப் பிரச்சினைகளை சமாளிக்கும் வகையில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் ஒழுங்குமுறையில் சந்தித்துப் பேச வைத்தோம். இது சாத்தியமாக இருந்தது. ஆனால் இன்று அந்த நிலைமையில்லை. இதனால் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் எனபது இறுதித் தீர்வல்ல. இது தீர்வைக் காண்பதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கான ஒருவழியாகும்.

இதனால் அரசிற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய பொறுப்பும் இருக்கிறது.

### ஜனாதிபதியின் நாடகம்

இது ஒரு புறமிருக்க ஜனாதிபதியின் சுயரூபத்தை இது வரையும் புரிந்து கொள்ள முடியாமலிருக்கிறது.

சமாதானத்தில் அக்கறையுள்ளவராக ஒரு புறம் நாடகமாடும் ஜனாதிபதி மறுபுறம் ஆயுதக் கொள்வனவிலும் ஈடுபட்டுவருகிறார்.

அது மட்டுமன்றி சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல எமது ஆதரவை நாடும் ஜனாதிபதி மறுபுறத்தில் எமது கட்சியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை வலை வீசிப் பிடித்து அரசுக்குப் பலம் சேர்க்கிறார்.

இவரது உண்மையான நோக்கம் தொடர்ந்தும் தான் ஜனாதிபதி பதவியில் இருக்க வேண்டும் என்பது என்றே நான் கருதுகின்றேன்.

அத்துடன், ஜனாதிபதி சட்ட விரோதமாக அரசியல் அமைப்பினை மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்துவருகிறார்.

அரசியல் அமைப்பை மாற்ற வேண்டும் என்பதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் அதனை அரசியல் அமைப்புக்கு ஏற்ற வகையில் மேற்கொள்ள வேண்டும்.

### ஜனாதிபதிதேர்தல் நடத்தப்படவேண்டு

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படவேண்டும். இதனை பின்போட நாம் அனுமதிக்கப் போவதில்லை. தேர்தலை உரிய நேரத்தில் நடத்தாது விட்ட கட்சிகள் அடுத்த தேர்தலில் படுதோல்வி அடைந்தமை வரலாறு.

1975 ஆம் ஆண்டு நடத்தப்படவேண்டிய தேர்தலை 2 வருடம் கழித்து நடத்தியமையால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அத்தேர்தலில் 8 ஆசனங்களை மட்டுமே பெற்றது. அதன் தலைவி எதிர்க்கட்சித் தலைவராகக் கூடவரமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இதைத்தவிர இந்தியாவில் சோனியா காந்தியைப் பிரதமராக வருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் அவர் அதனை உதறித் தள்ளியிருந்தார். இதனால் அவருக்குப் பெரும் மதிப்பு ஏற்பட்டது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.(க)

# இருதரப்பும் ஏற்கக் கூடிய வகையில் தீர்வு அமைய வேண்டியது அவசியம்

(கொழும்பு)

நாங்கள் சமாதானத்தை விரும்புகின்றோம், அதனை அடைவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம். எனினும், எம்மில் எந்நேரத்திலும் சமாதானப் பேச்சுவார்த்தையை முறியடிக்க முடியும். ஆனால் அதனை எம்மால் செய்ய முடியாது.

மாவரர் தின உரை மூலமாக எமக்குக் காலக்கெடு விதித்திருக்கும் விடுதலைப் புலிகளின் தலைவருக்கு ஜனாதிபதி தக்க முறையில் பதிலளிப்பார் என சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியல் நிரலில் நாட்டின் தேசியப் பிரச்சினைக்கே ஜனாதிபதி முன்னுரிமை கொடுத்துள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண முடியும் என்பதில் அவர் அன்றும் இன்றும் உறுதியாகவே உள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இலகுவான விடயமில்லை. இத் தீர்வை வடக்கு - கிழக்கு மட்டும் ஏற்றுக்கொண்டாலோ அல்லது தெற்கு மட்டும் ஏற்றுக் கொண்டாலோ பிரச்சினைகள் யாவும் முற்றாகத் தீர்ந்துவிடாது. தீர்வை இருதரப்பும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அனைவரும் எதிர்பார்த்திருக்கும் பிரபாகரனின் மாவீரர் தின உரைக்கான பதிலை ஜனாதிபதி தக்கமுறையில், தக்கதருணத்தில் கொடுப்பார். அமமுடிவானது இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையினை முன்னெடுக்கக் கூடியதாக அமைந்திருக்கும்.

பாழடைந்து போயிருந்த இந்த நாட்டின் பொறுப்பினை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொண்டிருக்காவிட்டால் தற்போது இந்த நாடு இந்நிலையில் இருந்திருக்காது.

அனைத்துத் தரப்பினரினதும் நன்மை கருதி, கருணை கருதியே அவரின் ஆலோசனையில் தற்போதைய வரவு - செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டது.

கடந்தகால வரலாற்றில் இல் லாத பல செயற்திட்டங்கள் இம் முறை வரவு - செலவுத் திட்டத்தில் அடங்குகின்றன எனவும அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# வெலிவிட்டிய பகுதியில் ஒருவர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவில் வெலிவிட்டிய பகுதியில் ஒருவர் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபரின் வீட்டுக்கு சென்ற இருவர் ரி-56 ரக துப்பாக்கியினால் அவரைச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் டிப்போவில் பரிசோதகராகக் கடமையாற்றி வருபவராவார். இவர் சுகயீன விடுமுறையில் வீட்டிலிருந்த போதே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அத்துருகிரியப் பகுதியிலுளள குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர்களே இந்தக் கொலையைச் செய்திருக்கலாம என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-8)

## ஆண்டு இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் ஆண்டு இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன.

மூனறாம் ஆண்டு முதல் 11 ஆம் ஆண்டு வரை கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரும் இப்பரீட்சைக்குத் தோற்றலாம் என அதிபர் கா.கணேசதாசன் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ற-19)

## வைத்தியசாலையிருந்தும் சிகிச்சை பெற முடியாத நிலை

(சாவகச்சேரி)

சில காலமாக இயங்காது இருந்த கைதடி அரசினர் வைத்தியசாலை மீண்டும் இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்ட போதும அங்கு செல்லும் நோயாளர்கள் சிகிச்சை பெறாது ஏமாற்றத்துடனேயே திரும்புகின்றதாகக் கூறப்படுகிறது.

அங்கு பெண் சிற்றூழியர் ஒருவர் மட்டுமே கடமையில் உள்ளார் என்றும், டாக்டர், மருந்து கட்டுபவர், மருந்து கொடுப்பவர் ஆகியோர் கடமையில் ஈடுபடுவதில்லை என்றும நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ வைத்தியசாலைக்கு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டபோதும் கடமைக்கு வருவது குறைவு எனவும் கூறப்படுகிறது. (க-29)

## வீதியில் வெள்ளம் பயணிகள் சிரமம்

(கரவெட்டி)

கரவெட்டி யா/சரஸ்வதி வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள வீதிகளில் வெள்ளம் தேங்கிக் காணப்படுகின்றது.

இதனால் அவ்வீதியால் பயணம் செய்யும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன், பாடசாலை மாணவர்கள் நண்டதூரம் சுற்றி வேறுபாதை ஊடாகவே பாடசாலைக்குப் போக வேண்டியதாகவுள்ளது. (க-108)

## அபிவிருத்தித் திட்டம்

(அரியாலை)

அரியாலை மத்தி, மற்றும் அரியாலை தெற்கு பிரதேசங்களில் நிக்கொட் நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

நிக்கொட் நிறுவனத்தின் 65 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. (ப-51)

## பாம்பு தீண்டியது

(துன்னாலை)

துன்னாலையில் வசிக்கும் சிவாஜிகணேசன் இராசகுமார் (வயது -16) என்பவர் வல்லிபுரக் குறிச்சி எனும் இடத்திற்கு மட்டை வெட்டச் சென்ற போது ஓலைக்குள் இருந்த ப்ாம்பு தீண்டியது.

இவர் தற்பொழுது மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். (ப-113)

## திருமறைக் கலாமன்ற தினம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 5.00 மணிக்கு யாழ்ப்பாணம் கலைத்தூது மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருப்பலியைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் பலவும் இங்கு இடம்பெறவுள்ளன.

திருமறைக் கலாமன்றம் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து 39 ஆண்டுகள் நிறைவடைந்து 40 ஆவது ஆண்டை ஆரம்பிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

## ஆபாச கசற்றுகள் கைப்பற்றப்பட்டன

(துன்னாலை)

நெல்லியடி புதுக்காட்டுப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து ஆபாசப் படக் கசற்றுகள் கரவெட்டி அரசியல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளன.

அரசியல்துறையினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் பேரிலேயே குறிப்பிட்ட வீட்டிற்குச் சென்று சோதனையிட்ட போது இவை மீட்கப்பட்டன.

ஆபாசப் படக் கசற்றுக்களை வைத்திருந்த நபர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். கைப்பற்றப்பட்ட கசற்றுக்கள் திரைப்படப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ற-10)

3.12.2004 வலம்புரி பக்கம் 13

கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல் - குறள்

வலம்புரி

# அவதானமாகச் செயற்படவேண்டிய தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள்

இனப்பிரச்சினை இப்போது வேறுவடிவத்தை எடுத்து வருகிறது. படைத்தரப்பும் விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்துகொண்டு அதனை கடைப்பிடித்து வருகின்றபோதிலும், அதனை குழப்புவதில் தென்னிலங்கையிலுள்ள சில தீய சக்திகள் முற்பட்டுள்ளன.

அவ்வகையில் தென்னிலங்கையில் ஓர் இனக்கலவரத்தை ஏற்படுத்தி அதன்மூலம் அங்குள்ள தமிழ் மக்களை வடக்கிற்கும் கிழக்கிற்கும் அனுப்புவது ஜே.வி.பியின் திட்டம். வடபகுதியில் சிங்களவர்கள் குடியிருக்கமுடியாவிட்டால் , தென்னிலங்கையில் மட்டும் தமிழர்கள் எவ்வாறு குடியிருக்க முடியும் - எப்படி வர்த்தகம் செய்யலாம் என்ற கேள்விகள் ஜே.வி.பி, சிஹலஉறுமய போன்ற இனவாத கட்சிகளிடம் ஏற்பட்டுள்ளது.

இதன் எதிரொலி சிங்கள பிரதேசங்கள் முழுவதிலும் கேட்கின்றது. அரசியல் புலத்தில் பிரசாரயுக்தியில் ஊறித்திளைத்த ஜே.வி.பி. மேற்போந்த பிரசாரத்தை பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அரச சேவையாளர்கள் மத்தியில் பரப்பிவருகிறது.

இதன் காரணமாக தென்னிலங்கையைச் சேர்ந்த பல்கலைக்கழகமாணவர்கள் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான போக்கினைக் கொண்டிருப்பது உணரப்படவேண்டிய விடயமாகும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை இருந்தவாறே இருக்க, தமிழ்-சிங்களமக்களிடையே வன்முறையை தூண்டிவிடும் ஜே.வி.பியின் புதிய யுக்தி அரங்கேறாமல் இருக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

குறிப்பாக ஜே.வி.பியின் கபடத்தனத்தை தென்னிலங்கை மக்களுக்கு அம்பலப்படுத்தி உண்மை நிலையை தெளிவுபடுத்தும் பொறுப்பை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செம்மையாகச் செய்துமுடிக்கவேண்டும்.

இதனைச் செய்வதற்கு நாடாளுமன்றத்தை தகுந்த முறையில் பயன்படுத்தவேண்டும். தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு சிலர் தமக்கு ஒதுக்கப்படுகின்ற நேரத்தை தகுந்தமுறையில் பயன்படுத்திக்கொள்வதில்லை. தேவையற்றவிடயங்களை தொட்டு விடுவதால் தேவையுள்ள விடயங்களை அவர்கள் விவாதிக்கமுடியாது போகின்றது.

அதேவேளை நாடாளுமன்றத்தில் தமிழ்க் கூட்மைப் பைச்சேர்ந்த எம்.பிக்கள் இருபத்திரண்டு பேர் அங்கம் பெற்றிருப்பது ஜே.வி.பிக்குப் பெருந்தலையிடியாகவுள்ளது.

கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிலேயே பாராளுமன்றத்தின் ஒழுங்கான செயற்பாடுகள் அமைந்துள்ளதென்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இது தமிழர்களுக்கு ஓர் சாதகமான கிடைப்பனவாகும் . இதனால் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை எதிர்ப்பதிலும், அவர்கள் பாராளுமன்றத்திற்கு வருவதைதடுப்பதிலும் ஜே.வி.பி சதித்திட்டம் தீட்டிவருவது மெல்லக்கசியத் தொடங்கியுள்ளது.

எனவே ஜே.வி.பி. தீட்டியதிட்டத்தை முறியடிக்கும் பொறுப்பு தமிழ்க் கூட்டமைப்பிடம் இருப்பதால் அதனை கச்சிதமாக செய்துமுடிக்க கூட்டமைப்பு எம்.பிக்கள் தங்களை தயார் செய்துகொள்ள வேண்டும்.

இலங்கை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித்தலைவராக காலஞ்சென்ற அமிர்தலிங்கம் இருந்தபோது அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதில் சிங்கள ஆட்சியாளர்கள் காட்டிய ஆர்வம்-அவர்கள் ஆற்றிய உரைகள் என்பன இன்றும் மறப்பதற்கில்லை.

அத்தகையதோர் சூழ்நிலையை மீளவும் ஏற்படுத்துவதில் ஜே.வி.பி. தீவிரமாக இருப்பதனால் அதனை முறியடிக்க தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இராஜதந்திர ரீதியில் செயலாற்றவேண்டும்.

# பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையைக் கைவிட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுக

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சுறுத்தலையும்,பீதியையும் ஏற்படுத்தியுள்ள இலங்கை-இந்திய பாதுகாப்பு உடன்படிக்கையினைக் கைவிட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிகோலுமாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் இந்திய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட்டாகக் கையொப்பமிட்டு இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ள மகஜரிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உத்தேச இலங்கை- இந்தியப் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் பயத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களுடைய பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. கடந்த ஆண்டில் சமாதான நடைமுறை பாரிய தடைகளை சந்தித்துள்ளது. பேச்சுவார்த்தை மூலம் சமாதான வழியில் தமிழ்மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காணுவது குறித்த இலங்கை அரசாங்கதின் உறுதிப்பாட்டில் தமிழ்மக்கள் பாரதூரமான சந்தேகம் கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் இலங்கை அரசு இராணுவ ரீதியில தன்னைப் பலப்படுத்திக்கொள்ள மேற்கொள்ளும் திட்டமிட்ட நடவடிக்கையாகவே தமிழ்மக்கள் கருதுகின்றனர்.

நீண்டதும்,கசப்பானதுமான ஆயுத மோதலுக்குப் பின்னரே யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. ஆயுத மோதலினால் தமிழ்மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அவர்களின் துன்பங்கள் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இலட்சக்கணக்கில் தமிழ்மக்கள் வீடிழந்து தொடர்ந்தும் அகதிகளாக வாழ்ந்து வருகின்றார்கள். தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு இராணுவ தீர்வு காணமுடியாது என்பதை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டதன் காரணமாக சர்வதேச அனுசரணையாளர்களின் உதவியுடன் இலங்கை அரசாங்கம், விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டு அதனுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது.

ஆயுத மோதலில் சம்பந்தப்பட்ட இருதரப்பினருக்கும் இடையே காணப்பட்ட இராணுவ சமநிலையே யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு அடிப்படையாக அமைந்தது.தமிழ்மக்களுடைய பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தீர்வு ஒன்றைக் காணுவதற்கு முன்பாக தற்போதைய இராணுவ சமநிலையில் மாற்றஞ் செய்வது அநீதியை விளைவிக்கும் என்று தமிழ்மக்கள் பலமாக உணருகின்றனர்.

இலங்கை அரசு கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக தமிழ்மக்களுடைய பிரச்சினைக்கு நீதியான தீர்வொன்றைக் காணுவதற்கு தவறி வந்துள்ளது. தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றைக் காணுவதற்கு இலங்கை அரசு காட்டி வரும் பிடிவாதப் போக்கினை இந்தியா முழுமையாக அறிந்துள்ளது. இன்று கூட சமா தானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பான அடிப்படை குறித்து இலங்கை அரசு மாறான கருத்துக்களையே கொண்டுள்ளது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்த விரிவான முன்மொழிவுகளை எழுத்து மூலம் ஒருவருடத்திற்கு முன்பாக விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ளனர். இவ்வாறான முன்மொழிவுகளைச் சமர்ப்பிதது பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான திகதியை நிர்ணயிக்கும்படி விடுதலைப்புலிகள் இலங்கை அரசாங்கத்தைக் கோரினர்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை கோரிக்கை தொடர்பான வேறு முன்மொழிவுகளை அரசாங்கம் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வந்தால் அது பற்றி கலந்துரையாடவும் விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான தமது விருப்பத்தை முரண்பாடில்லாத விததத்தில் மிகத் தெளிவாகத் தெரிவிப்பதற்கு அரசாங்கம் இன்னும் தயக்கம் காட்டி வருகின்றது. அரசின் இந்தப் போக்கினால் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்படுமென்ற அதன் உறுதிப்பாட்டில் தமிழ்மக்கள் வைத்துள்ள நம்பிக்கை குறைவடைந்து வருகிறது என்பதுடன் மீண்டும் ஒரு யுத்தத்திற்கு வழி வகுக்கும் சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்தி வருகின்றது என்ற அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இப்பின்னணியிலேதான் இலங்கை -இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை சமாதான நடைமுறைக்கு பங்கம் ஏற்படுத்தும் என்பதையும் தொடர்ச்சியாக தமிழர்களின் நலன்களைப் பாதிக்கும் என்றும் தமிழ்மக்கள் அச்சப்படுகின்றனர். இந்தியாவின் சட்டபூர்வ அக்கறைகளுக்கு பாதகமான முறையில் இலங்கை விவகாரத்தில் ஏனைய நாடுகள் தலையிடும் சாத்தியங்கள் குறித்து இந்தியா கொண்டுள்ள கவலை தொடர்பாக, தமிழ்மக்கள் கரிசனை கொண்டுள்ளனர்.

எவ்வாறாயினும் இன்று தலையாய தேவையாக தமிழ்மக்களுடைய பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணப்படவேண்டும் என்பது அமைந்துள்ளது. தமிழ் மக்களுடைய நலன்களுக்குப் பாதகமான முறையில் இநதியா செயல்படமாட்டாது என்பதில் தமிழ்மக்கள நம்பிக்கை கொண்டுள்ளனர்.

மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக இலங்கை - இந்தியா பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை செய்து கொள்ளும் நடவடிக்கையும், வடக்கு- கிழக்கில் இராணுவ பரிமாணம் கொண்ட அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பதையும் இந்தியா தொடர்ந்தும் செயல்படுத்தக்கூடாது என்று தமிழ்மக்கள் வேண்டுகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந-4)

# உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மீள்குடியமர்வு குறித்து மீளாய்வு செய்யப்படும்

## யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி

(யாழ்ப்பாணம்)

இராணுவ உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்கள் மீளகுடியேறுவது தொடர்பாக மீளாய்வு செய்ய முடியும் என யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி சுனில் தெனனக்கோன் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அனைவரினதும் கடமை. இந்தவகையில் தேசியப் பாதுகாப்பை நடைமுறைப்படுத்துவதில் தாம் முழுமையாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பிலும் கவனம் செலுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக சமூகத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக்குடியமரவும் விவசாயம் செய்யவும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் சில பகுதிகளில் இவற்றை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் சுனில் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாதுகாப்புக் கட்டளைத் தளபதி என்ற வகை யில் உடனடியாகப் பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் மக்களை மீளக் குடியமர்த்தி அவர்களுக்கு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதென்பது தற்போதைய நிலையில் சாத்தியமில்லை.

யாழ்ப்பாணத்தில் தமிழ்தெரிந்த பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்தவும் இராணுவத்தினரை தமிழ் மக்களுடன் இணைந்து செயற்பட வைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ந-4)

# 'சக்தி' ஊடக நிறுவனம் பக்கச் சார்பாக செயற்படுகிறது

## விமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மகாராஜா நிறுவனத்தின் தமிழ் ஒளிப்பரப்பான சக்தி ஊடகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனவும், அவ் ஊடகம் பக்கச்சார்பாகச் செயற்படுவதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம அமைச்சுக்களுககான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் ஹஸன் அலி,சிரச மற்றும் சக்தி ஊடகஙகள பொதுமக்களுக்குத் தரமான நிகழ்சசிகளை வழங்கி வருவதாகவும் அத்துடன் சக்தி தொலைக்காட்சியில் முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

(ந-8)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நூறுவருடங்களுக்கு முன்பு மனிதன் நடந்து சென்றான், அல்லது குதிரையில் சென்றான். இப்போது ரயிலில் செல்கிறோம் என்று மகிழ்ச்சியாக இருக்கிறான். ஆனால் அதற்காக அதிக வேலைசெய்து அதிகம் சம்பாதிக்க வேண்டியிருக்கினறதே என்று வருந்தவும் செய்கிறான். வேலையைக குறைக்கின்ற ஒவ்வோர் எந்திரமும் மனிதனின் வேலைப்பளுவை அதிகரிக்கின்றது.

சுவாமி விவேகானந்தர்

# வவுனியா - மன்னாரில் ஹர்த்தால்
# வழமைநிலை முற்றாகப் பாதிப்பு

## ஓமந்தை சோதனை நிலையமும் நேற்று திறக்கவில்லை

(வவுனியா)

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் தமிழ்மக்களினால் நேற்றுக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் அம் மாவட்டங்களின் வழமைநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

மாவீரர்நாள் நிகழ்வுகளைக் குழப்புவதற்கு பேரினவாத சக்திகள் மேற்கொண்ட முயற்சிகளைக் கண்டித்தும்,

மன்னார் வவுனியா மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் மாவீரர் நிகழ்வுகளைக் குழப்புவதற்கு இராணுவம் மேற்கொண்ட சதி நடவடிக்கைகள், மற்றும் பொதுமக்கள் மீது மேற்கொண்ட வன்முறைகளைக் கண்டித்தும் ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டது.

இப்போராட்டங்களை வவுனியா மற்றும் மன்னார் மாவட்டப் பொது அமைப்புக்கள் ஏற்பாடு செய்திருந்தன.

நேற்று மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் காரணமாகப் பாடசாலைகள் இயங்கவில்லை. ஊழியர் வரவின்மையால் அரச, தனியார் அலுவலகங்கள் அனைத்தும் செயலிழந்து காணப்பட்டன.

வியாபாரநிலையங்கள், சந்தைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. உள்ளூர், வெளியூர் போக்குவரத்துச் சேவைகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

இதன்காரணமாக வீதிகளிலும் முக்கிய இடங்களிலும் வழமையைவிட கூடுதலான இராணுவத்தினரும், பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

வீதிப் போக்குவரத்தை தடை செய்யும் வகையில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன.

ஓமந்தை மற்றும் உயிலங்குளம் முன்னணிப் பொலிஸ்நிலையப் பிரதேசங்களில் இராணுவச், சோத னைச்சாவடிகள் மூடப்பட்டிருந்தமையினால் வன்னிக்கும், வவுனியா மற்றும் மன்னாருக்கு இடையிலான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்தன.

இப்பகுதியில் கண்காணிப்புக் பணியில் ஈடுபடும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கண்காணிப்பாளர்கள் குறிப்பிட்ட இடங்களுக்குச் சமுகம் தராத காரணத்தினால் இவை மூடப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்நாயக்க தெரிவித்தார்.

இதற்கிடையில் வவுனியா - மன்னார் வைரவப்புளியங்குளத்தில் பொலிஸ் காவலரண் ஒன்று இனந்தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. சம்பவத்தின்போது அங்கு கடமையில் ஏவரும் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச,04,07)

---

## ஒளிவிழா

(கோப்பாய்)

உரும்பிராய் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை வருடாந்த ஒளிவிழா நாளை சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ப-79)

---

## பொலிஸாரின்...

யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை திருநெல்வேலியில் நேற்று முன்தினம் இரவு கத்தியுடன் சென்ற இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோட முற்பட்டபோதும் பொலிஸார் கைது செய்துள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அருணகிரி சிறிசெல்வம் தெரிவித்துள்ளார்.

நல்லூரைச் சேர்ந்த கே.ஜெயக்குமார் மற்றும் மரியதாஸ் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் நேற்று யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ச-130)

---

## 92 ஈழத்

யு.என்.எச்.சி.ஆரின் உதவியுடன் அரசு இந்நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-04)









---

## பண்டாரநாயக்க வம்சத்திற்கு....

ளுக்கு பெயர் போனவர்கள்.

எயார் லங்காவை விற்றது யார்? ரெலிக்கொம் நிறுவனத்தை தனியார் மயப்படுத்தியது யார்? பிறிமா ஆலையை விற்றது யார்? செல் காஸ் நிறுவனத்திற்கு ஏகபோக உரிமை வழங்கியது யார்? பிரான்ஸ் நாட்டின் வீடு ஒன்றை பெற்றுக்கொண்டு கொழும்புத் துறை முகத்தில் ஒரு பகுதியை பிரான்ஸின் மாஸ்டர் டைவேஸ் நிறுவனத்திற்கு விற்றது யார்? முன்னாள் பிரதமர் பிரேமதாஸாவோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவோ இவ்வாறு ஏதேனும் மோசடி செய்துள்ளார்களா? பண்டாரநாயக்க வம்சம் கடந்த 50 ஆண்டுகளாக பெரும் ஊழல் மோசடியில் ஈடுபட்டு வருகிறது. இதற்கு ஒரு முடிபுகட்ட வேண்டும். 50 ஆண்டுகளுக்கு முன்னர் பண்டார நாயக்க தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வந்து நாட்டை படுகுழியில் தள்ளினார் ஸ்ரீமாவோ இனப்பிரச்சினைக்கு எண்ணெய் ஊற்றி பற்றி எரியச் செய்தார்.

சந்திரிகா எல்லாவற்றுக்கும் மேலாக ஜனநாயகவிரோத சர்வாதிகார ஆட்சி நடத்துகிறார்.

ஊழல் மோசடி மலிந்து கிடக்கிறது. நான் இந்தச் சபையில் ஏழு கோரிக்கையை முன்வைக்கிறேன் இவ்வாறான 'கள்ள' குடும்பத்திற்கு வாக்குப் போடுவதைக் காட்டிலும் வேறு ஒருவரை நிறுத்துங்கள் நாங்கள் வாக்குபோடுகிறோம் என்று மகேஸ்வரன் ஒரு போடுபோட்டார்.

இதனால் சபையில் இருந்த ஆளும் தரப்பு எம்.பிக்கள் கொதிப்படைந்து மகேஸ்வரனைத் தாக்க முயன்றனர். இதனால் சபையில் பெரும் குழப்பமும் சர்ச்சையும் ஏற்பட்டது.

மேலும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இந்தியாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்து மோசடி செய்ததும் எங்களுக்குத் தெரியும் எனவும் மகேஸ்வரன் புட்டு வைத்தார்.

பண்டார நாயக்கா குடும்பத்தினர் மீது மகேஸ்வரன் போலி குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகிறார். இவரது கடுமையான விமர்சனங்கள் தொடர்ந்தும் சகித்துக் கொள்ள முடியாதளவிற்கு எல்லை மீறிவிட்டது.

இந்நிலையில் மகேஸ்வரன் கேட்கும் எந்தக் கேள்விக்கும் தாம் இனி பதிலளிக்கப் போவதில்லை என ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே கூறினார்.

மேலும் ஜனாதிபதி தொடர்பாக மகேஸ்வரன் விமர்சித்தபோது ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்து குழப்பத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைச் சட்டத்தை மீறி மகேஸ்வரன் செயற்படுவதாக ஏனைய ஆளும்கட்சி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டி கோஷமிட்டனர். இதனால் பாராளுமன்றில் பெரும் குழப்பநிலை ஏற்பட்டது. இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் ஆற்றிய உரையை கன்சாட்டிலிருந்து நீக்குமாறு சபாநாயகர் உத்தரவிட்டார். இதன் பின்னர் சபைக் குழப்பம் முடிவுக்கு வந்தது. (க-7)

---

## திருமலை நகரில்...

பிரதிநிதிகளான ஜோன் லாடன், ஜான் ஜோனிக், எல்.கே. லைசன் ஆகியோர் முன்னிலையில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமான இச் சந்திப்பு ஒன்றரை மணித்தியாலம்வரை தொடர்ந்து இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக இடம்பெற்ற பல்வேறு அசம்பாவிதச் சம்பவங்கள் தொடர்பாக இச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. இதனைத் தொடர்ந்து இரு சாராருக்கும் இடையிலான பொதுவான இணக்கப்பாட்டுடன் கூடிய ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்தின் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்குவதற்கான புரிந்துணர்வுடன் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் இச் சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது. கவச வாகனங்களையோ அல்லது இராணுவ மோட்டார் சைக்கிள் அணியினரையோ நகரில் தவிர்ப்பது எனவும் இணக்கம் காணப்பட்டது.

இதேவேளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது நகரில் ஹர்த்தால் போன்ற நடவடிக்கைகளை மாவட்டத்தில் உள்ள எந்தச் சமூகமும் முன்னெடுக்கக்கூடாதென போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் இங்கு கேட்டுக்கொண்டார். (த-04)

---

# கோண்டாவில் விக்கிரகங்கள் கொட்டாஞ்சேனையில்!

## சந்தேகத்தில் நால்வர் கைது

கோண்டாவில் மேற்கு நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலில் கடந்த மாதம் களவுபோயிருந்த தட்சணாமூர்த்தி சிலை நேற்று கொட்டாஞ்சேனைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய சிலரை பொலிஸார் விசாரணை செய்தபோது இவைமீட்கப்பட்டுள்ளன. இதன்போது யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த நால்வர். பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து பத்திற்கும் மேற்பட்ட தெய்வ விக்கிரகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவை நாளை கொட்டாஞ்சேனைப் பொலிஸாரால் கோப்பாய் பொலிஸிற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இதேவேளை மீட்கப்பட்ட விக்கிரகங்களை அடையாளம் காண்பதற்கு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்படவுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி சி[...]செல்வம் தெரிவித்தார். (ச-130)

---

## கொள்ளை...

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட கடையில் களவுபோன பொருட்களில் ஒருபகுதி நேற்றுக் காலை 8.30 மணியளவில் கஸ்தூரியார் வீதியில் வைத்து கொள்ளை மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டது.

இதனையடுத்து அவ்விடத்திற்குச் சென்ற யாழ். பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி விதானகே தலைமையிலான பொலிஸ் குழுவினர் பிரஸ்தாப நபரை கைதுசெய்ததுடன் அவரிடமிருந்த பொருட்களையும் .கைப்பற்றினர். இச் சம்பவம் தொடர்பாக உடனடியாக சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் ஊடாக கடையின் உரிமையாளருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் தனது பொருட்களை அடையாளம் காட்டினார்.

பொருட்களை விற்பனை செய்துகொண்டிருந்த மேலும் இருவர் தப்பியோடியுள்ளதாகவும் தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச,த)

---

## புலிகளின்...

ஒரு நாட்டுக்குள் இன்னொரு நாட்டை உருவாக்கும் ஒரு பிரிவினைவாத வரைபாகும். அதனை ஏற்று இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்தக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார். 1971 ம் ஆண்டு பங்களாதேஷ் யுத்தத்தில் எரிபொருள் நிரப்பும் உதவியினை இலங்கை வழங்கியிருந்தது.

அதனை நாம் ஒருபோதும் மறக்கப்போவதில்லை அதனால் இலங்கைக்கு என்றும் எப்போதும் உதவுகின்ற நாடாகவும் நண்பனாகவுமே பாகிஸ்தான் விளங்கும் என அவர் தெரிவித்தார். (த-04)

---

## அரசியல்...

படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அரசின் பதிலை எதி[...] பார்த்திருப்பதாகவும் கூறினார்.

திருகோணமலையில் தமிழ் மக்களை கோபமூட்டும் செயலில், அமைதிச் சூழலைக் குழப்பும் சக்திகள் ஈடுபட்டுள்ளன. அதனை அரசு கட்டுப்படுத்தவேண்டும். இவ்வாறான வன்முறைச் சம்பவங்களினால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-04)

---


## பகிரங்க ஏல விற்பனை

"யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கான வதிவிடத்திலுள்ள (பழைய பூங்கா) பட்ட மலைவேம்பு - 04, முதிரை மரம் - 01 என்பன 2004.12.18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இவ் ஏல விற்பனையில் குறிப்பிட்ட மரத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் அன்றைய தினமே அவற்றுக்குரிய பணத்தைச் செலுத்தி ஒரு வாரத்தினுள் மரங்களைப் பழைய பூங்கா வளாகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

மேற்படி மரங்களைப் பார்வையிட விரும்புபவர்கள் யாழ். மாவட்டச் செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்."

**செ.பத்மநாதன்,**
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

(C/814)



திங்கள் முதல் உங்கள் வலம்புரியில்

## மீன்பார்வை

புதியகளம்,

அரசியல், அறிவியல், சமூகவியல், வரலாறுகளை
அறிந்துகொள்ள அரியதோர் சந்தர்ப்பம்

மீன்பார்வையில் அடுத்து

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்

எழுதிய

யாழ்ப்பாணத் தமிழரசர்
வரலாறும் காலமும்


## பிரதேச செய்தியாளர்களுக்கான
## முக்கிய கூட்டம்

எமது பிரதேச செய்தியாளர்களுக்கான முக்கிய கூட்டம் நாளை 04.12.2004 அன்று முற்பகல் 10.30 மணிக்கு வலம்புரி கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

அதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**நிர்வாக உத்தியோகத்தர்**
**(வலம்புரி-சங்குநாதம்)**

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.